உ

திருச்சிற்றம்பலம்

கடல்சூழ்ந்த நெடியபுவியைக்
காத்திரக்ஷிக்கும்படி தென்பனசைமாநகர்
வடகலைவேள்வி நாட்டரசன் கோட்டையில்
எழுந்தருளியிராநின்ற

# கண்ணுடையம்மன் பள்.

இஃது
மேற்படி அம்மனது வரப்பிரசாதம் பெற்றருளிய
மகா-ா-ா-ஸ்ரீ சைவநெறி
முத்துநாயகமென்று திருப்பெயர் விளங்கிய

## முத்துக்குட்டிப் புலவரவர்கள்

இயற்றியது.

V. S. IYER

---

இதனை
நாட்டரசன்கோட்டை

## நகரத்தாரவர்களால்

---

வெகுதான்யஞு ஆனிமீ (1938ஞு)
பதிப்பிக்கப்பட்டது.

---

இப்பள்ளினைப் படிப்பவர்களும் ஷை அம்மனைத் துதிசெய்பவர்களும், சகலவினைகளும் நீங்கி புத்திர சம்பத்தும், தனகனகவஸ்துவாகனமும் தீர்க்காயுளும் பெறுவார்கள். அதெவ்வாறெனில் மேற்படி அம்மன் கிருபையால் அவித்த நெல் முளைத்து வருவதா லென்றறியலாம்.

---

இதன் விலை அணா 4.

உ

கணபதி துணை.

# ஸ்ரீமத் பராசக்தி

# கண்ணுடையம்மன் பள்

## காப்பு

### விநாயகர் தோத்திரம்

### விருத்தம்.

நீடுபெருஞ்செல்வம் நிறையுங்கலைவேள்வி
நாடுபுகழ்கண்ணுடைய நாச்சியார்பள்ளிசைக்கே
எடுமெழுத்தாணியுமுன் னேந்துமகமேருவுந்தன்
கோடுமெனக்கொண்டமதக் குஞ்சரந்தாள் காப்பாமே.

---

### பாயிரம்.

திருமாதிசைநாமகள்புவிமகள்ஜெயமாதிவளாமெனவரிசைசெய்
சிவகாரணிநாரணிதிருபுரைஜெகன்மாதா
இருமாநிலமேலுயர்புனைசநன்னகர்மேவியதேவிதன்னுடையவ
ளெனையாள்பவள்மீதினிலினியபள்ளிசைகூற
அருமாமறைதேடியபொருளுயாருள்சேர்மகமாயிசந்நிதிதனி
லபிஷேகவிநாயகர்திருவாசடிவாழ்வாய்
வருமாதிவிநாயகர்வடதிசைவளர்தேசிவிநாயகரிவருடன்
வருமூவர்விநாயகர்துணையெனமகிழ்வேனே (1)

காலாகியசுருதிக்கண்ணுடையவள் ஞானோதயபருதிக்கண்ணுடையவள்
நாவாணர்சொலநளினக்கண்ணுடையவள் நலநீர்வாழ்
சேலாலுயர்கருணைக்கண்ணுடையவள் ஸ்ரீதேவியென்னருமைக்கண்ணுடை[யவள்
சீர்மேவியபுனைசைப்பள்ளெனுமுயரிசைபாட
சூலாயுதசிவசத்தியுடனிறை சோழீசர்மெய்யருளைக்கைதொழுதொரு
சூர்மாபுரம்நெரிபட்டுருவவிடு சுடர்வேலோன்
மேலாமகபதிபுத்ரிகுறமகள் மேஞளரிகரபுத்ரன் வடுகையன்
வீரேஸ்வரனிவர்கள்பொற்பதமலர் மறவேனே (2)

தடமும்மதமாதங்கமாமுகர் தனிவெம்முனைவேல்கொண்டசேவகர்
தமதன்னையர்மூதண்டகோடிகள் தருதாயா
ரிடமென்மனமீதென்றுவாழுமென் னிருகண்மணியாய்வந்தபூரணி
இவள்கண்ணுடையாளன்புரீடுபள் ளிசைகூற
மடல்வண்ணமும்வாசஞ்செய்தாமரை மலர்மின்னலர்மேல்மங்கைநாயகர்
மணிவண்ணர்நம்மால்வேங்கடேசுரர் மறைவேதா
வுடனிக்கிசைநாமங்கைமாமதி யொடுபன்னிருவோரென்றகூரிய
ருயர்விண்ணவர்சீர்தங்கெதனுவினி லுறைவாரே (3)

வியனன்புடையோருக்குமனதினில் மிகநம்பினபேருக்குமினியசொல்
விளையுந்தமிழ்வாணர்க்கு மனுதினமருள்கூர்ந்து
பயனுந்தருதானக்கண்ணுடையவள் பணிகின்றமெய்ஞானக்
பதபங்கயசீலத்தையினியபள்ளிசைபாட [கண்ணுடையவள்
சுயமென்றடியேனுக்கும்வரமுயர் திதிதந்தபராசத்திபதமலர்
துணையென்றவள்பேரைச்சொல்லிய அருமையினாலே [மிக
நயமென்றெனதேழைச்சொல்வழுவி னும்நடுநுண்பொருளாணிச் சொல்லிது
நலதென்றுரைபூரிப்பர்தமிழ்தெரி நல்லோரே (4)

### கலிப்பா.

அன்னபரிபூரணிநல்லன்புடையாள்தென்பனைசை
நன்னகர்வாழ்கண்ணுடையநாச்சியார்பண்ணைதனில்
வர்னமயிலுங்குயிலும் வந்தனைசேர்பள்ளியர்கள்
சொர்னமயமாகவந்த சோபனமுஞ்சொல்வேனே (5)

---

## பள்ளிகள் வருதல்.

சுரும்படர்பூங்குழலுமன்மதவேள் பொரும்பகழிபுதுமுல்லைச்சரமுந்
துடியிடையும்இடையிற்பட்டுடையும் பிடிநடையொயிலும்
கரும்புருவச்சிலைகளும்நெருங்கிய குரும்பைகள்சாய்ந்திருந்தது போலெழில்
கனிந்திடுமூறக்கங்கொடுமென்னக் குனிந்திடுதனமும்
அரும்புனைப்பவளச்செவ்வாயு மிருப்பையும்வட்டுருக்கையுமுருக்கும்
அஞ்சனக்கண்பார்வையுங்கழுத்தினில் மஞ்சணைப்பூச்சும்
திரும்புமயிற்சாயலுங்குயில்கள் விரும்புகனிவார்த்தையுமிசையுஞ்
செந்நெல்க்குடிமூத்தபள்ளிவந்து தோன்றினளே (6)

மாந்தளிர்போல்மேனிபொன்னொளிவிடக் கூந்தல்மழைக்கார்நிறங்காட்ட
மருக்கொழுந்தும்வேருமல்லிகையும் சொருக்கினிலிலங்கக்
காந்தண்மலர்க்கரவளைகிலுங்கப் பூந்துகிலினிடைதுவண்டிடையக்
காலிலிடுபொற்பாடகஞ்சிலம்புக ளோலிடநடந்து •

*

மோந்திடுபன்னீர்மணம்பரிமளம் சாந்துஜவாதுகள்கமகமெனு
மொழிக்குமொழிதேன்வரக்குழல்மேல்விழிக்கயல்தாவ
யேந்துகொம்புக்கிணையெனவளர்ந்திரு மாந்ததனக்குடங்களுங்குலுங்க
இலுப்பைக்குடியிளையபள்ளிவந்துதோன்றினளே (7)

கலிப்பா

உத்தமமதேனும் மணிகண்ணுள்ளமகமாயிபண்ணைக்
கொத்தடிமைபள்ளன் குடும்புசெலுத்துந்திறத்திற்
பத்திமானதொழிற் பள்ளியர்கள்தங்கள்குடி
வர்த்தனையும்வந்த வரலாறுஞ்சொல்வேனே (8)

சிந்து.

கனகவில்லிதன்வில்லை ஜனகன்மகள்பொருட்டாற்
காரானைபோல்வளைத்த ஸ்ரீராமனூர்
புனல்சூழிலங்கைசேனை முனைவாளாலமர்வென்ற
புகழைத்தமிழ்க்கடலாய் மகிழ்ச்செய்தோன்
மனதுபூரிக்குங்கம்பர் பனசைமாநகர்தேடி
வந்தநாள்முதற்பண்ணை சொந்தமுள்ளோன்
தினமுங்கண்ணுடையவள் தனதடியானுக்கேத்த
சென்னெல்க்குடிமூத்தபள்ளிநானேயாண்டே (9)

மலர்மாதுகண்ணுடையாளுலகீன்றவட்குமூத்து
வடுகநாதேந்த்ரதுரைநெடுநாளைக்கும்
குலவுமிலுப்பைக்குடிநிலைமை சாம்ப்ராச்யமாகக்
கொடுத்தநாளிற்குடும்பன்தொடுத்தபடி
கலெனகுறுணிவார்த்தைபலநாளிற்சேர்க்கச்சொல்லிக்
காணிக்குக்கொண்டாளென்னை ஆணிப்பொன்போ
விலகுமகமாயிபேருழவுபண்ணைப்பள்ளனுக்
கிலுப்பைக்குடியிளையாள்நானேயாண்டே (10)

க்லிப்பா.

## பள்ளன் வருதல்.

வண்டுகந்தசெந்தாமரையில்வந்தமாமயில்சொற்
கண்டுவந்தசொல்லுடையாள்கண்ணுடையாள்கோவிலுக்குப்
பண்டுவந்தவூர்முழுதும்பண்ணைவந்தநாள்முதலாய்க்
கொண்டுவந்தகண்ணக்குடும்பன்வந்துதோன்றினனே (11)

தொண்ணூறுபொன்னைத்தியாய் வெண்ணீறணிந்தவாய்ப்புந்
தோளில்மண்வெட்டிக்கொட்டுந் துள்ளுமீசையும்
உண்ணவுண்ணமிகப்பேய்த் தண்ணீர்வெறிமயக்கம்
உருமால்க்கட்டுங்கொண்டையு மிறுமாப்புடன்
நண்ணுமிடையில்நீலவர்ன்னக்கருங்கச்சையும்
நையாண்டிவார்த்தை புங்கொண்டொய்யாரமாய்க்
கண்ணுடையநாச்சியார்பண்ணையுழவடிமைக்
கண்ணக்குடும்பன்வந்துதோன்றினனே (12)

விந்தைசேரிரணியன்மைந்தன் பிரகலாதன்
மிக்கபொன்மாவெலியுந்திக்காளும்நாள்
வந்தவேளாளருடன்முந்துநாடுநகரம்
வடக்குவாய்ச்செல்லியற்குநடக்கவென்று
சொந்தமானகிராமந்தந்துபெருநான்கெல்லை
சூலக்கல்லும்நாட்டியகாலத்திலே
அந்தநாள்முதலாய்வந்தெந்தநாளைக்கும்பண்ணை
அடிமைக்கண்ணக்குடும்பனேயாண்டே (13)

நன்னிலம்புகழ்தேவிசந்நிதிகும்பிடாரை
நாட்டில்வண்டிக்கிடாவாய்ப்பூட்டுமென்பேல்
இன்னமிவள்துணையென்றெண்ணிடாதிவர்நெஞ்சை
யிருத்திமண்வெட்டிக்கொட்டால்த்திருத்திடுவேன்
அன்னைகளியாட்டத்தைச்சன்னைசொன்னவர்நாவை
அடுத்தபயிர்க்களைபோலெடுத்தெறிவேன்
சொர்ன்னமயில்கண்ணுத்தாள்பொன்னடிவணங்காரைச்
சோறுதிண்ணிமாடென்றுமாறுவேனாண்டே (14)

## கலிப்பா.

பொன்பெருகுசெல்வம்புனல்பெருகுவாவியுஞ்சூழ்
தென்பனைசைக்கண்ணுடையதேவிதிருத்தாள்போற்றி
நன்பவளந்தேனொழுகநாட்டுவளம்பள்ளியர்சொல்
லின்பவளங்கேட்கமனதிச்சைவளர்ந்தேறியதே (15)

---

## நாட்டுவளம்.

பெய்யுமாரிநன்னீருள்ளநாடு பெருக்கமாவயலேருள்ளநாடு
பொய்யாமல்விளைசீருள்ளநாடு புண்ணியப்பொருள்வேருள்ளநாடு
உய்யுமாதவத்தோருள்ளநாடு கண்ணுள்ளநாச்சியார்பேருள்ளநாடு
வைகாசித்திருத்தேருள்ளநாடு வடகலைவேள்விநாடெங்கள்நாடே (16)

வெய்யசாபங்கடம்பவனத்தில்
        விடும்படிக்கொருவெள்ளானைபூசை
செய்யவேதிருக்கானைவனந்தேடிச்
        செல்லுமார்க்கத்திற்றீர்த்தமுமுண்டாய்த்
துய்யதோர்சிவலிங்கரிகால
        சோழன்கண்டிவர்சோழீசரென்றும்
வையைநாட்டிற்பிரதிஷ்டைசெய்த
        வடகலைவேள்விநாடெங்கள்நாடே (17)

எந்தநாட்டிலும்வற்றமின்றென்றும்
        யேழூர்ப்பத்துக்கும்லெக்காயிருந்தோன்
அந்தநாட்டரசன்றன்னரசுநா
        டாளும்நாளிலதிகாரங்கொண்டு
சொந்தநாட்டினிற்கோவிற்குளங்குடி
        சூழுங்கோட்டைதன்பேரிட்டுண்டாக்கி
வந்தநாட்டரசன்கோட்டையுள்ள
        வடகலைவேள்விநாடெங்கள்நாடே (18)

வாசமானதென்பாண்டிநன்னாடு
        மதுரைநாட்டில்வளருமின்னாடு
காசினிக்குட்கதிக்கின்றநாடுமுன்
        கம்பர்வந்துதுதிக்கின்றநாடு
பூசுரர்க்கன்னதானஞ்செய்நாடு
        புலவர்மேலபிமானஞ்செய்நாடு
ராஜலட்சுமிகண்ணுடையாளருள்
        நல்கும்நாட்டரசன்கோட்டைநாடே (19)

---

## நகரவளம்.

சொல்லினுலிசைகொண்டநகரம் சுகிர்தவாவிகள்கண்டநகரம்
        நெல்லினுல்நிதிதேடும்நகரம் நிதியினுல்தர்மம்நீடுநகரம்
எல்லவர்க்குமுகந்தநகரம் இளைசைவாழ்வுமிகுந்தநகரம்
        நல்லநாட்டரசன்கோட்டையேழூர் நகரமெங்கள்நகரங்காணுண்டே 20

செம்பொன்வேதியர்மாதாபிதாக்குரு
        தெய்வந்தன்னைவணங்குவதல்லால்
விம்பமாமுடிவேந்தரையும்புவி
        மீதினில்வணங்காதநகரம்
கும்பிடுதோறுங்கண்ணுடையாளைக்
        குடிவளர்க்குங்குலதெய்வமென்று
நம்பும்நாட்டரசன்கோட்டையேழூர்
        நகரமெங்கள்நகரங்காணுண்டே (21)

சென்றுநற்குடிமாறனழைக்கச்
    சிறந்தகாவிரிப்பூம்பட்டணத்தி
லன்றிருந்துபொற்றேரேறிவந்தோ
    ரருவியூர்சுந்தரந்தென்னிளசை
யென்றுமூன்றிலிளசையெனப்புகழ்
    எழுமாநகர்வாழும்வணிகர்
நன்றிசேர்கண்ணுடையாளைப்போற்றும்
    நகரமெங்கள்நகரங்காணாண்டே (22)

கண்ணினால்மதயானைநிறுத்துங்
    கடலில்விட்டகனகமழைத்தும்
பண்ணுகந்தவ்வைபாடலுக்கீந்துநற்
    பந்தற்காற்குப்பவளம்நிரைத்து
விண்ணுயர்ந்தபொன்மேருவுரைத்துமுன்
    மீனவன்முடிசூட்டியுமெய்யாய்
நண்ணுகீர்த்திபடைத்தவணிகர்
    நகரமெங்கள்நகரங்காணாண்டே (23)

கற்றவர்புகழ்மூன்றாங்குலம்வாழ்கக்
    கம்பனார்கோவிற்செம்பொன்னால்வேய்ந்தோ
ருற்றசீரகத்தார்புனைமார்ப
    ருயர்ந்தசிங்கக்கொடிவிருதுள்ளோர்
சுற்றமாமறையேழுகற்புள்ளவர்
    துங்கமாமலைத்தேனாறுடையோர்
நற்றமிழ்கண்ணுடையாளைப்போற்றும்
    நகரமெங்கள்நகரங்காணாண்டே (24)

தேட்டுகந்தவள்கண்ணுடையாட்குத்
    திருவிழாக்களியாட்டஞ்சிறப்பு
பூட்டுதங்கத்திருவாபரணம்
    புகழ்திருப்பணிபூசையுபயம்
கூட்டுமெய்ப்பொருளானநகரம்
    குடகர்நாட்டில்வடகலைவேள்வி
நாட்டுநாட்டரசன்கோட்டையேழூர்
    நகரமெங்கள்நகரங்காணாண்டே (25)

நீரெல்லாம்நிறைதாமரைக்கூட்டம்
    நிலமெல்லாம்விளைநெல்மணியீட்டம்
தேரெல்லாம்நவரத்னசிங்காரம்
    தெருவெல்லாந்திருத்தோரணவாரம்

பேரெல்லாமுயர் கண்ணப்பன்கண்ணம்மை
பேச்செல்லாந்தேவி காரணகாட்சி
பாரெல்லாம் புகழ் கண்ணுடையம்மன்
பனசைமாநகரூரெங்களூரே (26)

கச்சிருப்பது மங்கையர் கொங்கை
கடனிருப்ப தடுத்தோரைக் காக்கும்
குச்சிருப்பது கோதையர் கொண்டையிற்
கோளிருப்பது ராசிகள்தோறும்
தச்சிருப்பது கண்ணாளர் சேர்க்கையில்
தாழ்ந்திருப்பது கூபந்தடாகம்
பச்சிளங் கிள்ளைக் கண்ணுடையம்மன்
பனசைமா நகரூரெங்களூரே. (27)

தடையென்றுள்ளது வாழை மடற்குள்
தரிசென்றுள்ளது மாதர் சிலம்பில்
கடையென்றுள்ளது சந்தை வகுப்பில்
கலியென்றுள்ளது வர்த்தகர் பொன்னில்
கிடையென்றுள்ளது பாற்பசுக் கூட்டம்
கெலியென்றுள்ளது வன்கலிப் போரைப்
படையென்றுள்ளது பாலுட னன்னம்
பனசைமா நகரூ ரெங்களூரே (28)

---

### தீர்த்தச் சிறப்பு.

விண்டலம்பணி தேவி திருக்குளம்
வீரகண்டான் மெய்ச் செங்கமலத்தான்
மண்டலம்பெறு தீத்தார் குளம் நல்ல
வாத்தியாரோடை நாயமார்வாவி
எண்டிசைக்கு முயர் சொக்கனூரணி
யேழுதீர்த்தமுஞ் சூழும் தடாகம்
கண்டுளமகிழ் நாட்டரசன் கோட்டைக்
கண்ணுடையவளூ ரெங்களூரே (29)

---

### காரணக்காரர்.

கனகமேவியராசகரத்துடன்
கற்பகாலம் வளர் நகரத்தார்
பனசை நாட்டுள்ள நாட்டுக் கணக்குப்
பரம்பரம் வருந்தன்மகர்த்தாக்கள்

தினமுகந்திடு நாட்டரசன் கன
 செட்டிதேவன் ஜெகதல மெச்சும்
ஜனகராஜன் கரியான்குளியான்
 சதிருள்ள வடக்குத் தெருவானும் (30)

வட்டகை சூழும் பேய் வெட்டிகாளை
 வலையரசன் வருங் கொல்லுதச்சு
திட்டவட்டஞ் செய்தோர் வேலைக் கொத்தர்கள்
 சேரவே திருநாள் மண்டபத்திற்
கட்டளைப்படி தீர்த்தந்திருநீறு
 காரணம் பெருங் கண்ணுடையம்மன்
இஷ்டமாகிய நாட்டரசன் கோட்டை
 யேழூர்க்குமுதலூ ரெங்களூரே (31)

---

## ஊர்வளப்பம்.

கொந்துலாவிய சூரக்குளம்புதுக்
 கோட்டை புல்லணி யீச்சங்குடியும்
ஐந்தருவும் வளரி லுப்பைக்குடி
 ஆனைமாரியுடன் கடலாஞ்சி
வந்தனை செய்யுஞ் செட்டி குளஞ் சிறு
 மாருவெட்டி பொன்னுங் குடிபத்தும்
இந்தவூர் முதல் நாட்டரசன் கோட்டை
 யேழூர்க்கு முதலூ ரெங்களூரே (32)

நீணிலம்புகழ் தெற்குத் தெருவில்
 நிறைந்திருக்கு மல்லூர் பனங்காடி
சேணிலங்கும் புகழ் சூரைபத்தி
 திகழுடை குளஞ் செங்குளமாத்தூர்
வாணியங்குடி ஊத்திக்குளமெழில்
 வாய்த்த வெள்ளஞ்செய் வெப்பங்குளமும்
காணிகொண்டருள் நாட்டரசன்கோட்டைக்
 கண்ணுடையவளூ ரெங்களூரே (33)

சோலையெங்கணும் வானரந்தாவச்
 சுளைப்பலாக்கனி மா வொடரம்பை
மேலதிர்ந்து விழுந்து செழுங்கனி
 விண்டுதேறல்கள் மேதி யருந்தி

பாலணைந்து செஞ்சாலி விளைந்து
பழனமெங்கும் பணிலமுலாவும்
வாலசுந்தரி கண்ணுடையாள் பண்ணை
வாய்த்தசெந் நெல்க்குடி யெங்களூரே. (34)

வெள்ளமேல் மிகத்துள்ளிடு மீன்கள்
விரிந்தகஞ்சஞ் சொரிந்திடுந்தேன்கள்
உள்ளிருந்து வெள்ளோதிமஞ்சேரு
முழவுசாலில்வளைகள் வந்தூரும்
பள்ளியர்கள் குரவை முழக்கம்
பழுக்குஞ்சோலை கிளிக்கும் பழக்கம்
வள்ளிமாமியார் கண்ணுடையாள் பண்ணை
வாய்த்த செந்நெல்க்குடி யெங்களூரே. (35)

குங்குமங் கமழ்மங்கையர் கொங்கை
குடங்கள்கொண்டு குளிர்புனல் நீந்தும்
பொங்குதண் புனலோடை கொடிக்காற்
புறவும் நீள்வயற் பூங்காவனமும்
சங்கணிந்தவள் தேரின் முன்னின்று
தாளராசி சந்த்ரோதயங் காட்டும்
செங்கண்மால் தங்கைகண்ணுடையாள் பண்ணை
சேரிலுப்பைக் குடி யெங்களூரே. (36)

பூவில் வண்டுகளுண்டு களிக்கும்
பொருப்பில் வானரந்தேன் கொப்புளிக்கும்
மாவில்வாழ் குயில்மாரனைக் கூவும்
மறுகில் வந்திளந் தென்றலுலாவும்
காவில்வேழங்கமுகைப் பொருவுங்
கன்னலைப் பொருவுங் கதிர்ச்செந்நெல்
தேவிகண்ணுள்ள நாச்சியார் பூம்பண்ணை
சேரிலுப்பைக் குடி யெங்களூரே. (37)

## கலிப்பா

நற்றமிழ்சேர் கண்ணுடைய நாயகியாளென்னை யன்பாய்ப்
பெற்றவள்சேர் நாட்டுவளம் பேர்விளங்கச் சொல்லியபின்
கொற்றமத வேள்குயிலைக் கூவாய் குயிலேயென்
றுற்றதிருப்பள்ளியர் வந் துள்ளமகிழ்ந்தோதுவரே. (38)

## குயிற் சிந்து

சுகந்தமலர்ச் செழுங்கமலக் கண்ணுடையாள் சந்நிதிநற்
சொர்னமயமாய்த் துலங்கக் கூவாய்குயிலே
மகிழ்ந்து செய்யுங்களியாட்ட வைகாசித்திருநாளும்
மாருமல் விளங்கவென்று கூவாய்குயிலே
ஜெகந்துதிகளுஞ் சிவன்கோயிற் கோபுரமுங் குறைமுடிந்து
திருத்தேர் கொண்டருளவே கூவாய்குயிலே
உகந்த பெருமாள்கோயில் திருமதிளுமண்டபமும்
உபயபூசை நடக்கக் கூவாய்குயிலே. (39)

வயனிருவர் பரவுமுத்துவடுக நாதேந்த்ரதுரை
மார்க்கண்டன்போலிருக்கக் கூவாய்குயிலே
உயர்குளந்தைத் துரையரசு அரசுகள் குமாரவறக்கம்
உகந்து பெறவரந்தரவே கூவாய்குயிலே
தயவுள்ள மெய்ஞ்ஞான துரைதர்ம சமஸ்தானபதி
தழைத்தோங்கி வளரவே கூவாய்குயிலே
நயமிகு கண்ணுடையவட்கு இலுப்பைக்குடியூர் கொடுத்த
ராஜசிங்க மிவனென்று கூவாய்குயிலே (40)

படியிலுயர் வேதியரும் பசுக்குலமு மிசைக்கவிசொல்
பாவலரு மிகவாழ்கக் கூவாய்குயிலே
கொடியேற்றத் திருவிழாபரம்பர மண்டலபுருடக்
குருக்கள்வந்து நடத்தவே கூவாய்குயிலே
நெடியதடம்புவி வாழ்கத்தான தலம்பரிகலத்தார்
நிறைவாழ்வு பெற்றிருக்கக் கூவாய்குயிலே
அடியடி வாழைகளான அர்ச்சனை செய்பாரசைவர்
அனைவோரு மிங்கிருக்கக் கூவாய்குயிலே. (41)

சட்டமொடு மழைசொரிய ஊர்க்கிடையில் நிலம்விளையச்
சாணுன்குளம் பெருகக் கூவாய்குயிலே
சிட்டர்புகழிலுப்பைக் குடிசெந்நெல்க் குடிமுதலான
தேவதாயம் விளையக் கூவாய்குயிலே
அஷ்டதிக்கும் பிரண்டைக்குளம் பேய்வெட்டி காளையுழ
வடையோலைக் கதிகம்வரக் கூவாய்குயிலே
கட்டளையாய்த் திருவிழாக் காணிக்கை மூன்றுபணங்
கனிந்துதருங் குடிதழைக்கக் கூவாய்குயிலே. (42)

சதிரில்வரும் பயிர்பார்வை யென்பதுக்கெண்பது வரைக்கும்
தானியங்கள் தொகைபிறக்கக் கூவாய்குயிலே

கதிர்விளையும் பண்ணைமுதற் கட்டுக்கிடை ஊர்க்கூர்நெற்
 களஞ்சியமென்மேலும் வைக்கக் கூவாய்குயிலே
அதிகதிருவாபரணம் பூசைமிச்சம் வருஷமொன்றுக்
 கையாயிரம் பொன்காணக் கூவாய்குயிலே
பொதிபொதியா யரிசிவிட்டுத் திருநாள்மண்டபம் நடத்தும்
 புண்ணியர்கள் மிகவாழ்கக் கூவாய்குயிலே. (43)

தேவாதிதேவர் பணிகண்ணுடையவள் நாடு
 தென்பனைசையூர் செழிக்கக் கூவாய்குயிலே
பூவாசங்குலவு பஞ்சமாதேவி கீழக்குளம்
 பூத்தகுடி பொலிபொலியக் கூவாய்குயிலே
கூவூரணி வீருணிகண்டங்காத்தான் சோழன்
 கோட்டை நிலஞ்சுதையாகக் கூவாய்குயிலே
நாவாணர்துதி செய்யும் பெருமாளம்பலத்தாடி
 நஞ்சை புஞ்சைவிளையவே கூவாய்குயிலே. (44)

கனவிசையரகுநாதச் சேதுபதிசெய்த கொடிக்
 கம்பமண்டபம் புகழ கூவாய்குயிலே
புனிதமுறு சந்நிதிமுன் முகப்புமண்டப முடித்த
 புகழ்நகரத்தார் விளங்கக் கூவாய்குயிலே
தனது யீஸ்வரவருஷம் புதுத்தேர்வைத்திடு நகரம்
 தழைக்கு மூரவர் வாழ்கக் கூவாய்குயிலே
மனமகிழுங் கோபுரமுங்கட்டி வைத்தவூர்வணிக
 மகராசர் குலம்வளரக் கூவாய்குயிலே. (45)

இலகுதிருவிளக்கு பயம் நிலங்கொடுத்தோர் பணங்கொடுத்தோர்க்
 கினியவரங் கொடுக்க வென்று கூவாய்குயிலே
பலவுபயம் நகைகள் திருப்பணியுபயம் நடத்தினவர்
 பலவுபயம் பெற்றிருக்கக் கூவாய்குயிலே
குலவு தனிக்களியாட்ட முன்பு கொடுத்தவரின்னங்
 கொடுப்பவர்கள் குலம்வாழ்கக் கூவாய்குயிலே
உலகறியச் சூலம்போட் டபிஷேகப்பாற் பசுவிட்
 டுண்மை செய்தோர் நன்மைபெறக் கூவாய்குயிலே. (46)

திங்கள்தோறு மழைசொரியத் தேசமெல்லா மிகவிளையத்
 தினமுமக விலையேறக் கூவாய்குயிலே
எங்கு நிலமான வடகலைவேள்வி நாடுநகர்
 ஏழூர்ப்பத்துஞ்செழிக்கக்கூவாய்குயிலே
சங்கதிநாட்டரசன்கோட்டைவளர்நாடுநகர்
 சகலஜனமுந்தழைக்கக்கூவாய்குயிலே
மங்களகல்யாணசுபசோபனம்பெற்றுலகேழும்
 வாழிமிகவாழியென்றகூவாய்குயிலே. (47)

கலிப்பா.

மெய்பதிசேர்கண்ணுடையவித்தகிபொற்றாள்பணிந்து
வையகமெல்லாஞ்செழிக்கமாரிதரவேணுமென்று
பையவரும்பட்சேரிப்பள்ளியரெல்லாங்குரவை
செய்யமகிழ்வாய்க்குடும்பர்சேங்கைவெட்டுக்கூட்டினரே. (48)

கன்னல்வளர்பனசைநன்னகரந்திகழ்
கண்ணுடையநாச்சியார்பண்ணைதனில்
மன்னுபுகழ்பெரியசெந்நெல்க்குடிப்பள்ளரும்
வடிப்பமானயிலுப்பைக்குடிப்பள்ளரும்
இன்னிலமெல்லாமுள்ளமன்னினக்குடும்பரும்
இடங்கைவலங்கையுள்ளோரடங்கலுந்தான்
செந்நெல்விரைப்பெடுத்துமுன்னேசிறப்புவிட்டுச்
சேங்கைவெட்டுக்குநாளிட்டார்பாங்காகவே. (49)

## திருக்குளம் வெட்டுதல்.

நித்தமுங்கண்ணுடையாள்சித்தமகிழும்பண்ணை
நீடுங்கலைவேள்விநன்னாடுதனிற்
கொத்தடிமைக்குடும்பாத்தனைபேரும்வந்து
கொட்டுங்குரவையுமுன்னிட்டுவரப்
புத்தப்புதுமதுவிற்பத்துலட்சங்கலசம்
பூங்கோயில்முன்னிரைத்துச்சேங்கையிற்போய்
மெத்தமண்வெட்டிகொண்டுகூடைமண்ணெடுத்தேற்றி
மீண்டுவந்துகும்பிட்டடிவேண்டினரே. (50)

கலிப்பா.

செங்கமலக்கண்ணுடையதேவிதிருத்தாள்வணங்கித்
தங்கள்குடிச்சேங்கைவெட்டுச்சட்டமுடன்செய்ததற்பின்
எங்குமொருநாளிட்டெருதுகட்டவேகுடும்பர்
அங்குமிங்குநாளிட்டகமகிழ்ந்துகூறினரே. (51)

## கிராம தேவதைகள்.

சிந்து.

வடிவுள்ளமகமாயியானகண்ணுடையவள்பதம்போற்றியே
வனசைமாநகர்வேள்விநாட்டுள்ளபனசைமாநகர்காப்பவர்
குடிவளர்த்திடுங்கொட்டூருடையார்குருந்தூருடையார்சாக்கையன்
கூறும்பஞ்சமாதேவியுகந்தவீறுசேவகராயற்கும்

படிபுகழ்ந்திடுமுருகாவலன் பஞ்சாக்ஷரமுள்ளவருக்கும்
பரவுமோன்புக்கூற்றர்மேற்றிசை பார்த்தபொய்சொல்லாமெய்யர்க்கும்
நெடியகரும்புதேங்காய்பூப்பழம் நிரம்பப்பூசைநடத்தியே
நிகரிலையனுரெருதுகட்டுக்குப் பகரும்நாளிட்டார்களே (52)

தெள்ளுதமிழுக்குகந்ததேவிகண் ணுள்ளாநாச்சியார்பண்ணையிற்
செய்யிலுகந்தசெந்நெல்க்குடியில் வெய்யிலுகந்த ஐயனார்
அள்ளலூரஞ்சேரிலுப்பைக்குடியில் ஆதீனமழகையனார்
அங்குள்ளவர்க்குமிங்குள்ளவர்க்கும் பொங்கலுமிட்டுப்போற்றியே
புள்ளிமறுவில்லாததோர் கருந் துள்ளுமரியைப்பெலியிட்டு
புரவியெடுத்துக்குரவைமுழக்கிப் பூம்பந்தலின்கீழ்நிறுத்தியே
மெள்ளவேவலைப்பெரியான்கூத்துடன் மிகுந்தவேஷங்களாடவே
விருதுகட்டிமுன்னையனாற்கெல்லாம் எருதுகட்டினர்குடும்பரே (53)

## எருதுகட்டுச்சிறப்பு

கம்புகட்டியசேருடிக்குடைகொம்புகனத்தப்புடன்
கண்ணக்குடும்பன்முதலானசிலபண்ணைக்குடும்பர்சூழவே
கும்புகூடியவலங்கைவகுப்பிற்கூட்டங்கூட்டமாய்முன்வரக்
கொண்டாடிக்கொண்டுதீர்த்தந்திருநீறுண்டானபடிவாங்கியே
நம்பிரான்முன்னேநாட்டாசனும் நாலுகாரணக்காரரும்
நாச்சங்காளைவட்டம்வெட்டிக்கனபாச்சல்காட்டும்பரையெல்லாம்
சிம்புமெருதுவடந் தொட்டிழுத்துக் கொம்புபிடித்துவிளையாடி
தெய்வச்சடங்கு துடங்கினபடிசிறந்த திருநாள்நடந்ததே (54)

**கலிப்பா.**

பூவில்மழைபெய்யப் புகழ்ந்தெருது கட்டியபின்
காவியெனும்நீள் கருணைக்கண் ணுடையாள் கண்ணுடைய
தேவிகளியாட்டத் திருநாள் நடத்துதற்கு
நாவிலுரை சொன்னபடி நாளிட்டாருரவரே. (55)

**சிந்து.**

வித்தைக்குங்கனபுத்திக்கும் புகழ்மேன்மைக்குந் திறமானோர்
மிஞ்சினலடையாத காவிரிபஞ்சினல் உடன்கண்டோர்
வர்த்திக்குங்கனசெட்டுளோர் முழுமாணிக்கப்பிச்சை யிட்டுள்ளோர்
வாழுமாககர் மகராஜர்களெழு மாநகர்வணிகர்
தித்திக்குங்கனி கண்ணுள்ளசிவசத்திக் கன்புடனிதமும்
தேட்டஞ்செய்திடும் பொருளாங்களியாட்டஞ் செய்திடவென்றே
யெத்திக்குந்திருமுகமேவி முன்மெத்தக் கும்புகள்கூடி
யீடுகட்டிய செம்பொன்னுற் புதுவீடுகட்டினர்மிகவே (56)

## களியாட்ட வீடு ஜோடித்தல்.

வீடுகட்டி விலாசமாயதிலூடு சித்திரமெழுதி
விந்தையொத்த பொன்வாசலில் நிறைபந்தரிட்டலங்கரித்து
யேடுதொட்டெழுதாத தாமரைதேடுதற் கரும்பொருளாய்
எங்கள்மெய்ப்பொருள் கண்ணுடையாளைத் தங்கள்மெய்ப்பொரு
நாடுதற்கனுகூலமே மிகநீடுமெய்ப் புகழ்வணிகர் [ளெனவே
நன்னகரங்களெல்லாம் வந்துபொன்னகரம் போலிருக்கக்
கோடுதைத்த வன்முலையாரன்போடு நிற்பதுபோலக்
கூடுவாரிசைபாடுவார் விளையாடுவார் களிகூர்ந்தே (57)

**கலிப்பா.**

ஊரவர்கள்நாளிட்டு கந்தமணிப் பொன்னிலங்கக்
காரமிகுசெல்வக் களியாட்ட வீடுதனில்
ஆரமுலைமின்னார்கள் அம்மைபுகழ் பாடியபின்
கூரநிதம்வந்து முளைக்கொட்டி விளையாடுவரே (58)

---

## பூளைப்பாட்டு.

கட்டழகி யுத்தமியாங் கண்ணுடைய நாயகிமேல்
இஷ்டமிகு செந்தமிழா லின்பமுளைப் பாட்டுரைகக
சிஷ்டர்புகழ் தென்பனைசைத் தேசிவிநாயகனார்
அஷ்டதிசை போற்றுமத யானைமுகன் காப்பாமே
பூமடந்தை நாமடந்தை புவிமடந்தை புகழ்மடந்தை
மாமடந்தை யென்னவரு மலர்மடந்தை மாதரசி
மாதரசி வாழ்வரசி மண்ணரசி விண்ணரசி
சீதரனார் சோதரியாந் தெய்வப் பிராமணத்தி
தெய்வப் பிராமணத்தி சீதேவி நாச்சியார்
மெய்வாய்த்த பூங்கரும்பு விள்ளரிய தெள்ளமிர்தம்
தெள்ளமிர்தந் துள்ளமிர்தந் தேறப் பழுத்தகனி
பிள்ளைகளாய் மூவரையும் பெற்றெடுத்த பேடைமயில்
பேடைமயி லெனவிளங்கும் பேருள்ள பிடாரியம்மன்
ஊடுருவப் பார்வைசெய்யும் உண்மையுளோர் கண்டபொருள்
கண்டபொரு ளன்புடையோர் கருணைப் பெருக்காறு
தொண்டர் மனக்கோவிலுக்குத் தூண்டா மணிவிளக்காம்
மணிவிளக்காம் விலைமதியா மாற்றதிக மானதங்கம்
பணிவிளக்காஞ் செம்மலைமேல் பச்சைப் படர்ந்தகொடி
கொடியிடையாள் பிடிநடையாள் கும்பிடுவோர் குலதெய்வமாம்

வடிவழகு பூத்தகடல் மலையரசன் வளர்த்தகிளி
வளர்த்தகிளி சமர்த்திமகள் வள்ளியம்மை மாமியார்
முளைத்தெழுந்த கணபதிக்கு முருகனுக்கு மொருதாயார்
ஒருதாயா ரிவளெனவே உலகமெல்லா மீன்றகன்னி
விருது மகிடாசுரனை வென்றவளும் வீரசத்தி
வீரசத்தி வீரதுர்க்கை வேதாளக் கொடியிடையாள்
பாரசத்தி கோரருத்ரி பரமசிவன் கண்ணாட்டி
நாட்டிலுயர் கலைவேள்வி நாடுடையாள் நகருடையாள்
தேட்டிலுயர் வணிகருள்ள தென்பனசை மாநகரார்
மாநகரார் பாரசைவர் வங்கிசமே பூசைசெய்யும்
ஞானிலஞ்சேர் பூலோக நாயகியாங் கண்ணுடையாள்
கண்ணுடைய நாயகிக்குக் கண்குளிரப் பார்த்திருக்கும்
எண்ணரிய நவநிதியும் இசைந்துவைத்த பொக்கிஷமாம்
பொக்கிஷஞ் சேராபரணம் புதுவயிரத் தேர்திருநாள்
மிக்கபொரு ளுள்ளதெல்லா மிகத்தேடி வைத்தவர்கள்
வைத்தவர்கள் முத்தமிழை வளர்த்தவர்கள் மரபுடையோர்
எத்திசையுங் கொண்டாடும் எழுநகர் வாழ்வணிகர்
வாழ்வணிக ரம்பலமும் வளர்குடியும் பலகிளையும்
சூழ்வணிக ருரவர்கள் சொன்னபடி நன்னயமாய்
நன்னயமாய்க் களியாட்டம் நடத்துதற்கு நாள்குறித்து
மின்னுமணிக் களியாட்ட வீடுகட்ட வேணுமென்று
வேணுமென்று நாட்டவரில் மிக்கான கிளைப்பிரிவில்
காணிகொண்டு மதுவெடுக்குங் கன்னியர்கள் மனைதனிலும்
மனைதழைக்கும் மூர்க்கணக்கன் மகிபாலன் மனைதனிலும்
அனுதினமுந் திருப்பதி ஐயங்கார் சொற்படியே
சொற்படியே யங்குமிங்குஞ் சுபதினத்தில் தச்சுசெய்து
விற்பனஞ்சேர் கண்ணாளன் விஸ்வகுல தெய்வதச்சன்
தச்சப் பிச்சனுசாரி தன்துகொலுச் செல்லனுந்தான்
வச்ரமணி மாளிகையாம் வாசலிலே நடைகூடம்
கூடமின்று முகூர்த்தமிட்டுக் கோடிபொன் னேத்திசெய்து
நீடியபூம் பந்தரிட்டு நிறைமலரா லலங்கரித்து
அலங்கரித்த திருமனையி லம்மனைப்போ லுருவெழுதி
துலங்குதெரு வீதியெல்லாந் தோரணங்கள் மிகநிரைத்து
நிரைத்துவரும் விபவூ நிறைந்தகளி யாட்டத்துக்கு
விருதுரைக்கும் பதின்மூன்றும் விக்கிரம வருடமதில்

வருஷமுதற் றிங்களென வந்த சித்திரைமாதம்
திருவள ரேழாந்தேதி சேருமுதற் செவ்வாயில்
வாய்த்த திருக்கோயிலுக்கு மற்றுமுள்ள கோயிலுக்கும்
சாத்தெண்ணெ யமுதுபடி சகலசிறப்புங் கொடுத்து
தன்னகரிற் பெண்களெல்லாந் தயிலமிட்டு நீராடி
பொன்னுடமை பொற்புடவை பூஷணங்கள் மிகப்பூண்டு
நளபாகமாய்ச் சமைத்த நல்லமுது கறிவகைகள்
வளமான போஜனங்கள் வற்கவகை தானருந்தி
பங்கயம்போல் முகமலர்ந்து பாக்கிலையுந் தான்பருகி
குங்குமமுஞ் சந்தனமுங் குழைத்து மிகப்பூசி
தெண்ணீரிலே விளைந்த சீரகச்சம்பா விரையாம்
தொண்ணூறு கோட்டைவிரை சொரிந்து கடகத்தளந்து
கொட்டு முழக்குடனே குரவையிட்டுக் கோயில்முன்னே
சட்டமுடன் கொண்டுவந்து தளவிசையின் மேல்விரித்து
விந்தையுடன் சந்நிதியில் வீரபட்டண மனமகிழ்ந்து
சந்தனம் வீபூதிதரச் சகலஜனமுந் தரித்து
காதலுடன் மீளவந்து களியாட்ட வாசலிலே
கோதையர்கள் சோரமுளைக் கொட்டி விளையாடுவரே
நல்லதொரு செவ்வாய்க்கு நாலானுள் வெள்ளிதனில்
மெள்ளவந்து வாரியதை விரைகளெல்லாங் கோட்டைகட்டி
உற்றபெருந் திருக்குளத்தில் உள்ளபடி நனையவைத்து
மற்றவெள்ளிக் கைந்தாநாள் வருமிரண்டாஞ் செவ்வாயில்
நனைத்தவிரை தனைச் சொறிந்து நாச்சியார் மண்டபத்தில்
கனத்தபுங்கந் தழைமேலே கன்னியர்கள் தெளித்தனரே
உம்பருடன் தெளித்தமுளை உத்தமிகண் ணுள்ளவளை
நம்பினவர் கிளைபோலே நாளுக்குநாள் வளர்ந்ததுவே
முந்துமுளை வளர்ந்ததற்பின் மூன்றாஞ் செவ்வாய்தனிலே
வந்துமுளைவாரி யதைமறுதளத்தின்மேல் விரித்து
செவ்வாய்க்கி நாலாநாள் தெள்ளியதோர் வெள்ளிதனில்
கொவ்வையிதழ் மின்னார்கள் கூடிவந்து முளைவாரி
கண்டிருகண் களிகூர்ந்து களியாட்டவாசலிலே
கொண்டுவந்துமாவெடுத்துக்குடத்திலிளநீர்பெருக்கி
தேனைக்கலந்தெடுத்துத் திரைவளைத்துப்பானைவைத்து
பானைக்குமூன்றுசிறுய்பக்கமதில்வைத்திடவே
புனிதமுள்ளதேவிமதுப்பொங்கிவழிந்திடுமாம்

இனியதொருசுபதினந்தில்இருபத்திரண்டாநாள்
நறுமணங்கள்கமக்மெனநாலாஞ்செவ்வாய்தனிலே
பிறிதியுடனொருசோட்டுப்பெண்களெல்லாம்நீராடி
பட்டுடுத்திப்பணிபூண்டுபரிமளங்கள்கமகமெனப்
பொட்டுமிட்டுக்களியாட்டப்புறவீடுமுன்புவந்து
நெடுநிலத்தோரதிசயிக்கநிறைந்திருக்குமதுக்குடத்தை
நடுவிருக்குமொருகுடத்தைநாச்சியார்குடமெனவே
முறைமுறையாய்த்தெண்டனிட்டுமுதல்மதுவைத்தானெடுத்து
நிறைகுடங்களாயிரமாம்நீலக்குடமாயிரமாம்
சிறுகுடமும்பெருங்குடமுஞ்செம்பொற்குடமாயிரமாம்
நிறுக்கவொண்ணுவெள்ளிக்குடம்நீலக்குடமாயிரமாய்
பச்சைக்குடமாயிரமாம்பவளக்குடமாயிரமாம்
இச்சைப்படியொருகோடியினியமதுக்குடம்வரவே
பேரிகையும்பூரிகையும்பெரியதவில்மத்தளமும்
வீராணம்பதினெட்டுமேளவாத்தியமுழங்க
நடக்குமுயர்சங்கீதம்நடநாடகசாலை
இடைக்கியங்களாலவட்டம்இசைந்தகுடைகவரிகுஞ்சம்
மதயானைமனுவாசுமண்டலிகர்புடைசூழ
பதினாயிரந்தீவட்டிபகல்வத்திநின்றிலங்க
சாந்தொடுபன்னீர்சுகந்தஞ்சாம்பிராணிகமகமென
பூந்துகிலின்பாவாடைபொரிவாணம்பூச்சிதற
ஜெகராஜர்மகிழ்வணிகர்தெருவீதிதனைச்சூழ்ந்து
மகராஜிகண்ணுடையாள்மதுக்குடங்கள்வந்ததுவே
ஊரணிக்குட்பெலிபீடம் ஒற்றைப்பனையடியில்
வாரணிந்தகொங்கைமின்னாள் மதுக்குடங்கள்வந்ததுவே
சொன்னபடிதிசைநோக்கித்திள்ளுமரிப்பெலிகளிட்டு
சன்னிதிமுன்வந்துநின்றுசாம்பிராணித்தூபமிட்டு
பத்துலட்சங்குட்டிவெட்டிற்பனியளவுகுருதிபுண்டோ
மெத்தப்புதுமையென்றுவிண்ணவர்பூமலர்சொரிய
கண்ணுடையாள்திருவிருப்பிற்கண்ணுடையாள்மதுக்குடத்தை
கண்ணுடையாள்முன்புவைத்துக்கன்னியர்கள்போற்றுவரே
வடிக்குவாய்ச்செல்லியம்மைமாதாவேபூசைகொள்வாய்
அடைக்கலங்கள்காத்திடுமென்னாத்தாளேபூசைகொள்வாய்
பூசைகொள்வாய்பூசைகொள்வாய்பூங்குயிலேபூசைகொள்வாய்
ஈஸ்வரியேபூசைகொள்வாயென்றுமிகவேபணிந்து

நாலுதிக்குஞ்ஜனங்கள்வாநகரமெல்லாஞ்சூழ்ந்தவர்
வாலிபமாய்மங்கையர்கள்மனையில்வந்தார்சோபனமே
பார்வாழி சந்நிதிமுன்பரிகலமுந்தான்வாழி
சீர்வாழி பேர்வாழி தென்பனசையூர்வாழி
மனுவரசு சேருமுத்து வடுக நாதேந்த்ர துரை
அனுதினமும் புவிபுரக்க அரசுபெற்று வாழியவே
சகல குணமதியூகி தாண்டவ ராயேந்த்ர துங்கன்
புகழ்வளர மதிவளரப் பூவுலகில் மிகவாழி
வாழிமிக நாடுநகர்வாழ் வணிகர் கிளைவாழி
வாழி முளைத்தமிழ் வாழிவாழிமிக வாழியவே (59)

முளைப்பாட்டு முற்றும்.

---

## கலிப்பா.

தாயிலுமெய்யன் புளதாய் தண்ணளிசேர் கண்ணுடையாள்
கோயில் முளைப்பாட்டுரைத்துக் கொட்டி விளையாடியபின்
வாயிதழ் செந்தேனெழுக வாலிபமின்னார் வகுப்பில்
ஆயிரம்பேர் கும்மியடித்தன் பின் விளையாடுவரே (60)

---

## கும்மிப் பாட்டு.

---

செந்தாமரைத் திருக் கண்ணுடையாளம்மன்
சீதேவிமேற் கும்மிப் பாட்டுரைக்க
கொந்தாருங் கூந்தல் மடவாரேயிங்கே
கும்மி யடிப்போம் வாருங்கடி

கும்மியடித்துக் கவிபடித்து அம்மன்
கோயில் களியாட்ட வாசலிலே
ரம்மியமாக விளையாடினால் மிக
நன்மைதருவாள் கண்ணுத்தாளடி

கண்ணுத்தாளைப்போலே தெய்வமுண்டோ அவள்
காரணக் காட்சிபோல் காட்சியுண்டோ
விண்ணுட்டி லுள்ளவர்க்காணுலுமிந்த
மெய்யதியுண்டோடி தோழிப் பெண்காள்

மெய்யது சொன்னால் மலைபோலே பெண்காள்
வேடிக்கை சொர்ணச் சிலைபோலே
துய்யவள் கண்ணுள்ள நாச்சியார்புகழ்
சொல்லத் தொலையாது தோழிப் பெண்காள்

சொல்லச் சொல்லவரும் நாட்டமடிவந்து
சூழும்வெகு ஜனக் கூட்டமடி
செல்லத்துரைச்சி கண்ணுத்தாளுக்குமனத்
தேட்ட மெல்லாங் களியாட்டமடி

தேட்டமெல்லாங் கண்ணுத்தாய்மேலே அவள்
சித்தமெல்லா மிந்தச் சேய்மேலே
தோட்டமெல்லா மலர் கொய்தெடுத்தாமே
சூட்டுவோம் வாருங்கள் தோழிப்பெண்காள்

சூட்டவுமல்லிகைப் பூவிருக்கும் தீர்த்தத்
தொட்டி யடுத்தொருமா விருக்கும்
கூட்டுறவாய்த் தென்னங்காவிருக்குந் தேவி
கோவி லுடையாளம் பாருங்கடி

கோயிலுடையாள் குளமுடையாள் பொன்னின்
கோபுரவாசல் வள முடையாள்
தாயிலும் நல்லவள் கண்ணுடையாளெழு
தாரணி காணியுடை யாளடி

காணிக்கிவாய்த்த மகராசி தெய்வக்
கள்ளிச்சி ஞானக் கருமறத்தி
மாணிக்கச் செட்டிச்சி கண்ணுத்தாளிந்த
வையமெல்லாம் பெற்ற மாதாவடி

மாதாவென்று லம்மன்தாணிவளே சிவன்
வாழ்வு தருமலை மாணிவளே
சூதாந்தனத்திலங் கண்ணுடையா ளன்பு
சொன்னால் வெண்தாமரை மின்னளடி

மின்னே நமக்கென்ன தாட்சியடி இனி
மேலும் வரும் பொருளாட்சியடி
கண்ணாலே காண்கலாங் காட்சியடிகண்ணுத்
தாயாரே பூலோக சாட்சியடி

பூலோக மானதோர் மங்கையடி புவி
பூத்து முதிராத கொங்கையடி.
கோலாகலமலர் மங்கையடி அம்மன்
கோதண்ட பாணியார் தங்கையடி.

கோதண்டமா மலர் வாளியடி அண்ட
கூடமிவள் பதத் தூளியடி
மூதண்ட பத்திரகாளியடி அம்மன்
மூவர்க்குந் தான் முதலாளியடி

தான்முதலாளியாய் வந்தாளடி வந்து
தந்தியைக் கந்தனைத் தந்தாளடி
வான்முதலாயுள்ள கண்ணுடையா ளிங்கே
வந்தாள் நம்மையுகந் தாளடி

நம்மூலகெங்கும் நடுகீரில் வைத்து
நனைத்த நெல்லு முளைப்பதுண்டு
அம்மனதிசயங் கண்டியளோ வெங்னீ
ரவித்த நெல்லு முளைக்குதடி

நெல்லு முளைக்குங் களியாட்டந்தனில்
நேர்ந்து விடுங்கன துள்ளிமறி
சொல்லு முன்வந்து பெலியிடவேயொரு
சொட்டத்தனை ரத்தந் தோணுதடி

தோணுமல்வீட்டினில் வைத்திருந்து பெண்கள்
ஜோடிப்புக்கேட்கக் கொடாத பொருள்
காணுமற்போகவுங் கண்டிடவுந் தேவி
காரணங் காட்டவுங் கண்டோமடி

கண்டு கண்டுள்ளங் களிகூர்ந்துதேவி
கண்ணுள்ள நாச்சியார் காரணத்தை
அண்டர் முனிவர் நவநாதிசித்தர்க
ளாரறி வாரடி தோழிப்பெண்காள்

ஆரறி வாளிவள் நீதியடி களி
யாட்ட திருநாள் முன்னுதியடி
சோருமனத்தர் விரோதியடி அம்மன்
தூணி லுதித்த செஞ்ஜோதியடி

தூணைத் துரும்பாக வாட்டுவதும்பின்
    துரும்பையுந் தூணாக நாட்டுவதும்
காணாப் புதுமைகள் காட்டுவதும்தேவி
    கண்ணுடை யம்மன் கடாக்ஷமடி

கண்ணுடையம்மன் கருணைவைத்தாற் பண்டு
    காய்ந்த மரமுங் கனிசொரியும்
பெண்ணுடனாணும் பெறுவார்கள் அம்மன்
    பேரிடப் பேரிடப் பிள்ளையடி

பேரிட்டுக் கும்மியடியுங்கடி சற்றும்
    பிந்தாமற் கும்மி யடியுங்கடி
நேரிட்டுக் கும்மியடியுங்கடி பெண்காள்
    நித்தமுங் கும்மி யடியுங்கடி

நித்தமுங் கண்ணுள்ளநாயகியை உங்கள்
    நெஞ்சகந் தன்னில் நினைந்துகொண்டு
வர்த்தனைக் கும்மியடியுங்கடி நல்ல
    வடகலை வேள்வி நாட்டுப்பெண்காள்

நாடுநகரமும் பொன்னாலே வரும்
    நாலூர் ஜனங்களும் பொன்னாலே
ஆடல்பாடலும் பொன்னாலே களி
    யாட்டப் பூமனை பொன்னாலே

பூவிரிபந்தலும் பொன்னாலே கண்டு
    பூசிக்கும் பேர்களும் பொன்னாலே
தேவிமதுக்குடம் பொன்னாலே வைத்த
    தென்னம் பாளையும் பொன்னாலே

பொன்னனை பூங்கோயில்க் கண்ணுடையாளம்மன்
    பூங்குயில் வாழி புகழ்வாழி
நன்னாடுவாழி நகர்வாழி அம்மன்
    நாட்டரசன்கோட்டை வாழியவே (61)

கும்மிப்பாட்டு முற்றும்,

---

**கலிப்பா**

தண்டாமரை யுகந்தாயிலுங் கண்ணுள்ளவளைக்
கொண்டாடிக் கொண்டுபெண்கள் கும்மிவிளையாடியபின்
கண்டார் மனங்குளிரக் காசினியெல்லாந் தழைக்க
உண்டாய் மழைக்குறிக ளுள்ளதெல்லாந்தோன்றியதே (62)

## மழைக்குறி.

மூடுபனிமழை வந்துசாடுது குறிவாயில்
முட்டைகொண்டு சிற்றெறும்பு கட்டியேறுது
நீடுமதிதன்னிற் பரிவேடமிடுது சூகை
நிரையிட்ட குழிவாயிற் கரைகட்டுது
கூடுதோறுங்கிடந் தன்றிற்பேடுரைக்குது மின்னற்
கொங்குமீளமு மெதிர்த்திட்டெங்கு மின்னுது
தேடுபொருள் கண்ணுடையாள் நாடுதழைக்கப்பண்ணைச்
சேரிப்பள்ள ரெல்லா மினிப்பூரித்திடுமே (63)

சந்ததமுந் துணையென்று வந்தவர்க்கெல்லாம் அருள்
தாயகி சர்வலோக நாயகியெனும்
அந்தரிகண்ணுடையவள் சிந்தைமகிழும் பண்ணை
அன்னக்கொடி கட்டிவளர் செந்நெல்க்குடியும்
பிந்தாதயிலுப்பைக்குடி யெந்தவூரிலும் வெள்ளம்
பெருகிமறுகால் விடவருகுது மழை
சொந்தமானபண்ணை யாண்டைக் கிந்தவயணம்நாமே
சொல்லவரும் பண்ணைப்பள்ள ரெல்லவருமே (64)

---

### கலிப்பா.

கண்ணுடையதாயார் களியாட்டங் கொண்டருளும்
தண்ணளியார்மெய்யருளாள் தாய்முகங்காணுஞ் சேய்போல்
பண்ணைமுகங்காணப் பயிர்முகம் பூரித்தெழும்பி
மண்ணுலகெல்லாஞ் செழிக்க மாரிசொறிகின்றதுவே (65)

நீலமுகில்கள் வடக்குவாய்ச்செல்லி கோலமேனிபோ லுருக்கொண்டு
நிரந்தரமாகப் பொதிகைவரைமேற் பரந்திரைந்து நீர்சொரிந்திட
வாலைகோமளை மகமாயிகையிற் சூலாயுதம்போல் மின்னியே
வழக்கஞ்சேர் களியாட்டப்பேரிகை முழக்கம்போல் மேகங்குமுறியே
பாலலோசனை கருப்புவில்லினைப் போலேவானிலே வில்லிட்டுப்
பத்துதிசையும் பரந்துகாலூன்றி மெத்தத்தானே செம்பிரமாய்
ஞாலம்புகழுங் கருணைக்கண்ணுள்ள நாச்சியார் திருவருளைப்போல்
நதிசெய்வெள்ளம் பெருகிவரும் அதிசெயம்பாரும் பள்ளீரே (66)

ஜெகந்தழைத்தருள் குறிஞ்சிபுகுந்து குகன்றிருப்பதம் போற்றியே
சிறந்துபாலையிலுறைந்து கண்ணுள்ள தெய்வத்தை மனமேவைத்து
சுகந்தமுல்லையில் முகுந்தன் மருந்தாலுகந்த பகவானெய்தலிற்
சொன்னவருடன் றன்னைவணங்கிச் சின்னவயிரத் திருக்கைமீன்
பகர்ந்தகளிறு மசரைதேளி பஞ்சிலைகொண்ட சினைவரால்
பருமீனுஞ்சிறுமீனுங் குதிக்கப் பரிந்துகண்ணுள வம்மனைப்
புகழ்ந்திடும் புலவோர்கள்மனையில் மிகுந்திடுஞ்செல்வம் வருதல்போற்
புதுமழைவெள்ளம் பெருகிவரும் புதுமைபாரும் பள்ளீரே (67)

### கலிப்பா.

வட்டநெடு வாவிகுளம் மாரிசொரி நீர்பெருகுந்
திட்டமது கண்டுநல்ல தேவிபண்ணை யுள்ளதெல்லாஞ்
சட்டமிட வென்றே தனித்து நகரத்தார்கள்
கட்டளையாய் வைத்தபண்ணைக் காரன்வந்து தோன்றினனே (68)

---

### பண்ணை மணியக்காரர் வருதல்.

விக்கல் மிடறுருங்குதிரை மொக்கணி வாயுங்கூன
வில்லுப்போல் முதுகுஞ் சுக்காங்கல்லுப்போற் பல்லும்
முக்குறுணி சோறடையும் பக்கவயிறும் பரு
முட்டுவாயில் மீசை யிலேழெட்டு மயிரும்
கொக்குப்போல் நரைத்த தலையுஞ் சிக்குநாற்றமு மாறு
குண்டுகண்ணுந் தன்னிலே தான்கண்டு மகிழ்ந்து
திக்காசி கண்ணுடையாள் மிக்கபண்ணையில் நாளுஞ்
சேரவந்த கோவில்ப்பண்ணைக் காரனுர் வந்தார் (69)

சாணுக்கொரு பொய்யனுரே கும்பிடுகிறேம் கோணத்
தடிக்கம்புக் கையனுரே கும்பிடுகிறேம்
தூணுக்குங்கால் நீண்டவரே கும்பிடுகிறேம் வங்கு
சொரிபத்தி ஆண்டவரே கும்பிடுகிறேம்
வீணுக்குவீண் பேச்சனுரே கும்பிடுகிறேம் குல்லா
வேடிக்கைக் கைவீச்சனுரே கும்பிடுகிறேம்
ஆணுக்கு ளழகனுரே கும்பிடுகிறேம் பண்ணை
ஆண்டவரே அடியார்கள் கும்பிடுகிறேம். (70)

### கலிப்பா.

கம்புபண்ணைக்காரன் நயினுர் வந்தாரெனவே
கும்பிடுமுன் கண்ணக் குடும்பனைக் கண்டேகோயிற்
கெம்பரை நெல்கட்டுக் கிடைவிரை நல்லோர் வகுப்பிற்
சொம்புடனே சொல்லெனவே தொழுதுபள்ளன் சொல்லுவானே (71)

### சிந்து.

### விரைவகுப்பு.

சொரிகுரும்பை நெல்லீர்க்குச் சம்பாவெள்ளைத்
தூய்யமல்லி பொற்பாளை யுண்டைக்கார்
வரிசைகொண்ட கொசும்பாக் கல்லுண்டை
வரகஞ்சம்பா மணவாரி வாலான்

கரியிரங்கலும் நானூறு கோட்டைநெல்
நாட்டாசன்கோட்டை கண்ணுடையாள்
பெரியபண்ணைக் கிசைந்த விரைகள்
பெருக்கமாய் வைத்திருக்கிறேனாண்டே (72)

---

## மாட்டுவகை.

நெட்டைக்கொம்பன் குடங்கொம்பெருது
நெடியவாலன் பனங்காய்மயிலை
சட்டைக்கேத்த கருமறைக்காளை
தளப்பன்போரெரு தல்லியன்காளை
கட்டக்காளையுங் கண்டதைஞ்ஞூறுண்டு
காளைக்கோன்கிடைக் காராம்பசுவும்
மட்டக்காளையுங் கொட்டியமாடும் (73)

வகைக்குநூறு துகைப்படியாண்டே
விண்ணுளோர்பணி கண்ணுள்ள தெய்வத்தை
மெய்யென்றெண்ணாத வீணர்கள் நெஞ்சில்
எண்ணுமஞ்ஞானக் கட்டியைப்போலே
யிருப்புக்கட்டி கரைத்தகொழுக்கள்
கண்ணிலேகண்ட தொண்ணூறுமேழி
கலப்பையேர்க்கால் வடமும்நுகமும்
பண்ணையோர்க்குள்ள சோடினையெல்லாம் நான்
பத்திரம்பண்ணிவைத்தேன் காணாண்டே (74)

### கலிப்பா.

கோட்டை நெல்லுமாடுங் குடும்பன்வகை கூறியபின்
மீட்டுமந்தப்பண்ணை விசாரிப்பான் மெய்ப்பாகத்
தேட்டமொடு கண்ணுள்ள தேவிவயலாடு வைக்க
ஆட்டிடையரைப்போ யழைத்துவா வென்றாரே (75)

---

## ஆட்டிடையன் வருதல்.

நீட்டுராமுந் தேட்டுராமும் நெல்லுராமு மாகையினால்
ஆட்டுராமு மாட்டுராமும் வயலூராங்கா ணாண்டே
வயல்முழுது முள்ளவாய் மடைமுழுது முடையவள்
செயல்முழுதுங் கொண்டுநான் சீரிடுவே னாண்டே
சீரிடுவேன் கண்ணுடையாள் செந்நெல்க் குடிவயல்முதலாய்
எரிடுமுன் னூரமேத்த யினிவருவே னாண்டே
வருவேனென் றுரைத்தபடி மகிழ்ந்தாட்டுப் பட்டிகொண்டு
குருவாரநாள் கண்ணக்குடும்பனும் வந்தானே (76)

### கலிப்பா.

தண்ணமிர்தங் கண்ணுடைய தாயார் கிராமமெல்லாம்
நண்ணுவய லாடுவைக்க நாட்கொண்டுதான் குடும்பக்
கண்ணனெதிர் சொன்னையங் கண்டிடையர் சேரவந்தார்
கெண்ணியஞ்சே ராட்டுக் கிடையும்வந்து சேர்ந்ததுவே (77)

### சிந்து.

கதிக்குங்கோவிற் குடியான பேய்வெட்டி
காளைக்கோனுங் கனதுகை ஆடும்
குதிக்குஞ்சே ரிளங்குட்டியுங் குட்டிக்
குடாப்புடன் கிடைக்காலுந் தான்கொண்டு
துதிக்கிணங்கிய கண்ணுடையாள் வயல்
சூழ்ந்த பண்ணைத் தொழிலிசமானி
மதிக்கவே ஆட்டுப்பட்டி கொண்டிப்போது
வந்தார்கள் கோன்கள் வந்தார்காணுண்டே (78)
பச்சை மாமயில் கண்ணுடையாட்குப்
பரம்பரம் வரும்பண்ணைக் கிராமம்
மெச்சு செந்நெல்குடியிலுப்பைக்குடி
மீதமுள்ள வயல்நில மெல்லாம்
நிச்சயஞ்செய் திடையர் வகுப்பில்
நித்தம்நூறு கிடையா டமைத்தே
இச்சையா யிருபத்தொரு நாள்வய
லெல்லாம் நானுரமேற்றினே னாண்டே (79)

### கலிப்பா.

இப்படியே பண்ணைவயலெல்லா முரமேற்றிச்
செப்பமிகு கண்ணுடையதேவி பண்ணைக் கேற்றதொரு
கப்பலென வந்தபண்ணைக்காரன் மகிழ்ந்திருக்க
அப்போது பஞ்சாங்க அய்யங்கார் வந்தாரே (80)

---

## பஞ்சாங்க ஐயர் வருதல்.

தேவமந்திரி வியாழபகவான்
திராணியுள்ள திருப்பதி அய்யன்
நாவலர் துதிமிஞ்சிய கண்ணுள்ள
நாயகிவயல் நாளேரிடவே
மேவும்வெள்ளிநற் பஞ்சமிமூலம்
மிதுனலக்கின வேளைநல்வேளை
ஏவுமென்னக் குடும்பனைப் பண்ணையா
ஸீன்று நாளேரிடென்று சொன்னாரே (81)

## நிலப்பேர்.

### சிந்து.

சீருகந்தவள் கண்ணுடையாட்குத்
திருவிளைநிலஞ் சென்னெற் குடியில்
சாருகின்ற பெரியசெய் பள்ளச்செய்
சம்பாச் செய்யுடன் வானங்கமேடும்
காருலாவு மிலுப்பைக் குடியிற்
கருப்புக்காலும் வாகஞ்செய் சம்பாச்செய்
எருழும்நிலம் எகமும் காற்றங்கால்
எங்கும் நாளேரிடென்று சொன்னாரே (82)

### கலிப்பா.

அச்சுதனார் தங்கையென்னை ஆளவந்த கண்ணுடையாள்
வச்ரமணி போல்விளைவு வாய்த்த வயலுள்ளதெல்லாம்.
உச்சிதமாய் நாளேரிட் டுள்ளபண்ணைப் பள்ளரங்கே
மெச்சுபண்ணைக் காரனுக்கு மீண்டுவந்து சொல்வாரே (83)

### சிந்து.

வரைமாது கண்ணுடையதேவி பெரும்பண்ணை
வயலில் நாளேரிடவே மேவி
விரைவாகநாங்கள் சொல்லும்போது தனித்தனியே
மெய்நிமித்தங் கண்டது பொய்யாது
இரைதேர் கருடன் காடையிடமும்
இரட்டைப் பார்ப்பாரும் பாற்குடமு மங்கே
நிரையாக வந்திது காணேரேநல்ல
நிரைவிளைச்சல் விளையும் நயினாரே (84)

மன்னிவைப் பள்ளுள்ளதெல்லாங் கூட்டிரெண்டூர்க்கும்
வயலுக்கும் நூறேர் பூட்டி
முன்னமுன்னே திசைநோக்கித் தொழுதுபண்ணை
முதற்கரை பிற்கரை முழுதும் உழுது
நன்னயமாய் வரப்புவெட்டி யிருத்திக் குளைமிதித்து
நாலுழவில் பரம்படித்துத் திருத்தி
சொன்னபடி கேட்கவென்று மீண்டோ மிதுசமயந்
தொளிகளெல்லாஞ் சமைந்தது காணாண்டே (85)

### கலிப்பா.

கத்தனிவனென்று பண்ணைக்காரன் வகைசொன்னபடி
கொத்தடிமைப் பள்ளரெல்லாங் கோவில்வய லத்தனையும்
உத்தமிக ளைத்தாள் உலகமெல்லாந் தன்கருணை
வித்து விதைத்தாற்போல் விரைவிரைத்து வந்தாரே (86)

### சிந்து.

தினைக்குங்குறவர் மனைக்குந்தொழிலாய்த் திரியும்பிள்ளையைப் பெற்றவள்
செல்வக்கண்ணுள்ள நாச்சியார்புகழ் திருவிழாக் களியாட்டத்தில்
முனைக்கண்டுடனே அவிததநெல்முளை முளைக்கவைத்த சீமாட்டிக்கு
மூன்றாங்கொம்பி னனைத்தவிரைநெல் முளைப்பதுமெத்த அருமையோ
நனைக்கும்விரை யத்தனையுங்குடும்பன் நாற்றங்காலில் விரைத்தபின்
நறுந்தண்ணீர்விட்டுப் பருவஞ்செய்திட நல்லநாச்சியார் கண்ணம்மன்
தனைக்கண்குளிரப் பூசிக்குஞ்சிவ சைவரும் பாரசைவருஞ்
சார்ந்தகிளையும் வளர்ந்தாற்போல்வயல் சேர்ந்தமுளைகள் வளர்ந்ததே (87)

அக்கணிந்தவருட நடம்புரி மூக்கணம்பிகை யென்னவே
அடையாளத் திருவடிவுகொண்ட கண்ணுடையாளைத்தொழுமன்பற்கு
பக்குவம்பெரும் வடிவும்வயது மக்களுங் கிளைவர்க்கமும்
பாலும்பண்ணையு மேருஞ்சீரும் பவுசும்வளர்ந்து வருதல்போற்
திக்கினிலுள்ள சிட்டுக்காடைகள் தக்கமணிப்புறா தன்னுடன்
சேருஞ்சிறகி மாடப்புறாக் கவுதாரி தன்னுடன்கூடியே
கொக்கினமுதற் குருகினம்வந்து புக்கிடம் தெரியாமலே
குளந்தண்ணீர்குளிர் தாமரைபோலே விளங்குநாற்று வளர்ந்ததே (88)

### கலிப்பா.

சொல்லருமைக் கண்ணுடையாள் துய்யமலர்த் தாள்பணிந்து
வல்லபண்ணை யாண்டை மகிழ்ந்துரைத்த சொற்படியே
எல்லாரும் பட்சேரி யெங்குமுள்ள பள்ளியர்கள்
நல்லதினந் தன்னில்வயல் நாற்றுநடச் சென்றாரே (89)

---

## நாற்று நடுகை.

DR. ESA SWAR

(தினதிறென தினதிஞென தினதிறென திமிதிமி)

மிருந்தநகரக் குடிக்குமூர்ந்த மேவுபுலிக்குங் காவலாய்
மேல்முகந்தன்னில் வடக்கேமுகமாய் வீற்றிருந்து தன்னூரிலே
பகர்ந்ததோடங் காச்சல்கருப்புப் பஞ்சம்படை வாராமலே
பக்கத்துணைநின் றடைக்கலங்காக்கும் பாதுகாப்பிச்சியானவள்
நகுந்தனுக்கிளையவள் கண்ணுடையாள் மகிழ்ந்திடும் பண்ணைவயலுள்ளே
முளைத்தநாற்றை வளைத்துப்பறித்து முடிகட்டிக் குடும்பேற்றவே
வகுந்துமுதலைப் பகுந்துவயலிற் புகுந்துமிகவும் நடுகைக்கு
வண்ணப்பள்ளிகள் வந்தார்கள்கன பண்ணைப்பள்ளிகள்காணுமே (90)

சீதளமலர்க் கண்ணுடையவள் பாததாமரை போற்றியே
செங்நெல்க்குடியு மிலுப்பைக்குடியும் சிறந்துபள்ளிகள் நிறைந்துதான்
ஆதரவுடன் வெய்யிலுகந்த ஐயனார் கொட்டூருடையவர்
ஆதனமழ கையனார்க்கும் அதிகபூசை நடத்தியே

போதைமகிழ்ந்து கண்ணக்குடும்பன் புள்ளிப்பள்ளருங் கூட்டிப்போய்
பொருந்துகள்ளுடன் சாருயப்படை திருந்துகுடந் தொட்டருந்தியே
மாதிரேந்தரும் நாற்றுமுடியை வைத்துவணங்கி வானுள்ளே
மடவாருங்கண்டு மகிழவேநாற்று நடவாரும் வாரும்பள்ளீரே (91)

விரும்புகாளையில் வாள்மேல்நடந்தாள் வீறும்பாகைப் புல்வாயம்மன்
விளைபணங்குடிப் பெரியநாயகி வெற்றியூரணி அம்மனும்
அரும்பொருளுரு வாட்டிப்பெரியாள் அடுத்தமங்கலந் தன்னில்வாழ்
அரியவளிவ்வாறு பெண்களுக்கும் பெரியவ ளன்பர்க்குரியவள்
பெரும்புவியெல்லாம் பெற்றவளென்னைப் பெற்றதாய் கண்ணுடையவள்
பேரிர்பள்ளிசை பாடியேபண்ணை யூரிற்பள்ளிக ளெல்லோரும்
குரும்பையசையக் கரும்புகனியக் குரவைமுழக்கி விளையாடி
கோவில்நாற்று நடுகைக்கேகனி வாயில்வாழ்த்தும் பள்ளீரே (92)

நகரக்குலதெய்வங் கண்ணுடைய நாச்சியார்க்குப் பரம்பரம்
நடக்குந்தேவ தாயமுழுதும் நன்னாட்டுவரி பலவரி
சகலவரியும் பருவரிமெத்தத் தலத்துவரியுந் தள்ளியே
சருவமானிய உம்பளமாகச் சாம்ப்ராச்யப் பட்டயந்தந்தோன்
மகாராஜன் முத்துவடுகனாதேந்திரன் வளர்சம்ஸ்தானந் தழைக்கவே
மதிமந்திரியான தாண்டவராயன் மார்க்கண்டனைப் போலிருக்கவும்
ஜெகமெல்லாம் வளர்ந்திடவுந்தேவியைத் திக்குநோக்கி முன்கும்பிட்டுத்
நிரைத்தசெந்நெல் நடவாரும்வாரும் உரத்தபண்ணைப் பள்ளீரே (93)

சினத்தைவென்றவர் தமக்கோரடிமை ஜெகத்துள்ளோர்க்கொருபொதுப்
செந்தமிழ்முத்து நாயகம்பா தேவதை துணையென்னவே [பிள்ளை
நினைத்திருக்கு மைந்தெழுத்தினாலது தனக்கிருப்பிடமென்னவே
நெஞ்சின்மேல்வைத்த கல்லுங்காடும் பஞ்சின்மேல்வைத்த பூவென
கனத்திடாதுவந் துதவியருளின் மனத்திட மயங்காமலே
கருணைமருந்தால் நெஞ்சடைப்பையுங் கைவலியையுந் தீர்த்தவள்
புனத்திலங்கிள்ளை கயற்கண்ணுடையாள் தனைத்தினந் திசைநோக்கியே
போற்றிசெய்தவள்புதுமையைச்சொல்லி நாற்றுநடுங்காண்பள்ளீரே
(94)

அன்னப்பெண்பிள்ளை அழகுசொரியச் சொர்னப்பெண்பிள்ளை பாண்டியன்
அருமைப்பெண்பிள்ளை கண்ணுடையவள் பெருமைக்கிசைந்த பண்ணையாம்
செந்நெல்குடியில் மறக்குப்பான்செய்யில்ச் சேர்ந்தகோவில் வாசற்செய்
திருவியார் செய்யும் அரசடிச்செய்யும் சிறுசம்பா நாற்றுநடச்செய்தே
பொன்னைக்கண்டது போலேகுடும்பன் தன்னைக்கண்டொரு பண்ணையான்
பூராயத்துடன் வரையிலேயவன் சாராயக்குடி வெறியிலே
சன்னக்கும்பிடு போலவேயொரு சின்னக்கும்பிடு போட்டதுமவன்
சாய்ப்பையும் பள்ளனேய்ப்பையுந்தொளிவாய்ப்பையும் பாரும்பள்ளீரே
(95)

ஆதிரைத்திருநாளுளோர்க்கொரு சோதிரத்னமாய் வந்தவள்
அன்னபூரணி கண்ணுடையவள் ஆளுஞ்செந்நெல்குடிதனில்

மாதிரத்துடனழகன்வயக்கல் மாவடிச்செய்கல்லஞ்செய்
வாய்த்தகண்ணுடையாள் வயக்கலும் வானங்கமேடும் நடச்செய்தே
பாதிரிப்பூவைப்பறித்துப்பாமி சாதிரைக்குள்ளே மறைத்திட அதைப்
பள்ளன் கையிலே தாவென்றானவ ளுள்ளங்கையிலே பூவென்றாள்
எதிருக்குது சொல்லென்றானவள் மோதிரக்கையால் நில்லென்றாள்
இதத்தையும்வெகுவிதத்தையுங்கெளிமதத்தையும்பாரும்பள்ளீரே (96)

வரிச்சிருக்கமுன் கூரைவெந்திட மனைக்கிளப்பம் வராமலே
மகிமைசெய்து நல்வரஞ்செய்கண்ணுள மகமாயி புகழ்வளர்ந்திட
விரிச்சநெட்டிலை கதலிகமுகு விளங்குஞ் செந்நெல்க்குடிதனில்
வெட்டுச்செய்யுடன் பிள்ளைவயக்கல் பொட்டச்செய்யிலும் நடச்செய்த
நரிச்சியென்கிற மூத்தவள் பள்ளப் பெரிச்சியுண்கிற சோற்றிலே
நஞ்சாணத்தைவிட்டூட்டினாளவள் சொண்டாணில்க்கள்ளையூட்டினாள்
சிரிச்சுக்கொண்டவன்சிறுபள்ளியெலி பொரிச்சுக்கொண்டாந்தகறியெல்லா[ம்
தின்றுதந்திடமென்றுதின்கிற சிங்காரம்பாரும்பள்ளீரே (97)

அருந்தவப்பொருள் கருணைக்கண்ணுடை யம்மனைத்தினம் பூசிக்கும்
அருமைநம்பியான் வீரபட்டனுக் கர்ச்சனை பாகம்பல்தலை
திருந்துபிச்சுடையான் செய்நல்லியர் செய்விளாவடிச்செய்யுடன்
சீறிசெய்நல்லகோப்பன் செய்பெருந் திருவியார்செய்யும் நடச்செய்தே
குருந்தனிர்கையிலுச்சியேபள்ளப் பெருந்தனுக்குள்ளமெச்சியைக்
கூப்பிட்டகுரல்கேட்டதேயவள் காப்பிட்டகையாற்காட்டவே
மருந்தனப்படிநின்றுவளரப் பெருந்தனப்படியென்றதும்
மச்சானும்பயலொச்சானுஞ்செய்யு முச்சாயம்பாரும்பள்ளீரே (98)

வடகரைப்புலிச்சிவர்ளமூத்து வடுகநாததுரைசிங்கம்
மாநிலந்தருந்துரைக்குவேண்டிய மைந்தனைத்தருமகமாயி
கடகளிற்றினைமுருகனைத்தரும் கண்ணுடையவள்வயலுள்ளே
கருப்புக்காவிடைதாரைகாத்தான் காலாங்கரைச்செய்நடச்செய்தே
மடவானைத்திரள்நடைபடித்திட வருஞ்செந்நெல்க்குடிப்பள்ளியும்
மலர்பொற்கொடிசேரிலுப்பைக்குடியில் வாய்த்தபள்ளியும்நேர்த்தியாய்ப்
பிடவைகட்டிநல்லுடமையிட்டதைப் பேச்சிலேசொல்லும்வருக்கமுந்தனப்
பெருக்கமுங்கிளைநெருக்கமும்பள்ளனுருக்கமும்பாரும்பள்ளீரே (99)

அரம்பையர்க்கணங்காசிகண்ணுடை யம்மனுக்குள்ளசொம்மெனும்
அதிகப்பொருள்சேரிலுப்பைக்குடியில் அரண்மனைதனிற்கட்டளை
பரம்பரம்வருமுத்துநாயகம் தினம்பெறுதனதும்பளம்
பதிங்கலவிரைப்பறவிலும்நல்லபண்ணைநாற்றுநடச்செய்தே
வரம்பருகிலேபள்ளியைக்கண்டு பரம்பொருபுறந்தள்ளியே
வள்ளக்கையிலேகால்வைத்தானந்தப் பள்ளப்பயலேமேல்வைத்தான்
பிரம்பானழகிவலுக்கிறாளவள் பேத்தியுமுலைதுலக்கிறாள்மெத்தப்
பிலுக்கிறாள்வலைகிலுக்குறாள்முத்துக்குலுக்குறாள்பாரும்பள்ளீரே (100)

மதிக்கும்பனசைப்பதிக்கும்புவிக்கும் மதிக்கும்பொருள்கண்ணுடையவள்
மன்னினபொருளிலுப்பைக்குடியில் மகிழும்நாட்டுக்கணக்குடன்
துதிக்கும்அம்பலந்தலத்துக்காவல் சுயம்பகாம்வயிராவிகள்
தோப்புப்பண்டாரதலத்தார்நிலத்தில்வாய்ப்புக்கண்டுமுன்னடச்செய்தே
பதிக்கும்நாற்றைமிதிக்குஞ்சேற்றிற் பரப்பும்பள்ளிகள் நடுவிலே
பக்கப்பார்வை அடககிக்கடைக்கண் பத்தியாயந்தக்கெண்டையைக்
குதிக்குங்கெண்டையிதென்னவேவயல்க் குருகினங்கண்டுண்ணவே
குடும்பன்கச்சால்க்கொண்டரிக்கிறானந்தக்கோமளம்பாரும்பள்ளீரே (101)

வள்ளிக்கொடிநன்கருணைக்கண்ணுள்ள மகமாயிபுகழ்வளர்ந்திட
வாய்த்தபண்ணையில்குடியானமேகங் காத்தவராயனுழவுதான்
சொல்லிற்பெரியசாணான்குளத்தில் துதிசெய்யும்கணபதிசெய்யும்
துலங்குகண்ணுடையாள்வயக்கலும்சூழ்ந்தநிலங்கள்நடச்செய்தே
நெல்லிக்காய் மூலைச்செல்லிக்காய்ப்பள்ளன் அல்லிக்காய்பறித்தெறிந்தும் அ
நெடும்பிச்சிகண்டுபறித்ததுமதைக்குடும்பிச்சிகண்டுமறித்ததும் [தை
சல்லிப்பேச்சிலேசொல்லிக்கேட்கிறான் நல்லிக்கிச்சொன்னசாரமும்விப
காரமும்உபகாரமும்பச்சா பாரமும்பாரும்பள்ளீரே (102)

கொட்டிவைத்திடுதிரவியம்போலே செட்டிமக்களை வளர்ப்பவள்
குவளைக்கண்ணுடையவளைப்பணிந்து குலவுஞ்சாக்கூர்வயலுள்ளே
நட்டிளைத்துவிடாதிருத்தலும் நாச்சியார்செய்பொட்டச்செய்
நாயங்குடியில்ப்பொத்தக்கண்ணன்செய் நாலுபொருளும்நடச்செய்தே
கட்டிகட்டியாய்விளைந்துடைந்திடுங் கனிப்பலாச்சுளையினிப்பிலே
கலிச்சியுஞ்சின்னப்பிலிச்சியுமந்தக் களப்பஞ்செய்திளங்குரும்பைமேல்
எட்டியெட்டிமுன்னெறிந்தசேற்றை யிருளக்குடும்பன் துடைக்கப்போய்
எலுமிச்சம்பழமதுக்கிறானந்த வலுமிச்சம்பாரும்பள்ளீரே (103)

தளத்தில்வருமண்டலிகர்கெப்புலி தாண்டவராயதளசிங்கம்
சலுகைக்காரிஉலகைவளர்த்த சமர்த்திகண்ணுளநாச்சியார்
குளத்திவயலில்அழகன்வயக்கல் கூறும்நாச்சியார்செய்யுடன்
கொத்துக்கணக்கன்சிறுகுளந்தனில் குண்டச்சன்தனைநடச்செய்தே
வளத்துடன்வரும்பெருமையைக்கண்டு மனஞ்சகியாமற்பொருமியே
வலியவந்துவிளாத்தக்குடியில் மடைதிறந்துநல்லுவச்சனசெய்
மூளைத்தண்ணீர்விட்டுமுனியக்குடும்பன் இளைத்துவாரானென்றேறச்சல்லோ
மோரைக்கேட்கிறப்போலேரெண்டிள நீரைக்கேட்கிறான் பள்ளீரே
(104)

படைக்கும்புவனப்பரப்பும்நிரப்பும் பகிரண்டமும்பெற்றெடுத்தவள்
பனசைப்பதிநற்கண்ணுடையவள் மனதுக்கிசைந்தவயலுள்ளே
இடைக்கிடைபெறும்வடகொருக்கையில் ஏகாலிச்செய்செய்க்கெல்லாம்
ஈடுகட்டியநாச்சியார்செய்யும் காடுவெட்டியும்நடச்செய்தே
உடைக்கும்வாய்மடையடைக்குங்குடும்பன் உழவுபண்ணைவயலுள்ளே
உச்சிதப்பள்ளிகள்நடுகைச்சிந்துகள் ஒருமித்தின்பமாய்ப்படிக்கையில்
அடைக்கிநாத்திறாள் கடைக்கண்ணோட்டத்தில் ஆட்புள்ளிமெள்ளப்பார்க்கி
அதுக்கல்லோகண்ணக்குடும்பனிற்கிறான் ஒதுக்கிலேபாரும்பள்ளீரே [றான்
(105)

வாரைப்புனையுந்தனத்தினுளொழு பாரைப்புனையுங்கனத்தினன்
வடக்குவாய்ச்செல்விகண்ணுடையவள் மகிழும்பண்ணைவயலுள்ளே
நாரைக்குலஞ்சேர்சூரைக்குளத்தில் நாச்சியார்செய்தன்னுடன்
நாவிதன்தனைபுல்லனூர்வயல் நாலுபொருளும் நடச்செய்தே
சீரைப்புகழ்ந்துபடிக்கையிற்பள்ளன் சிறுபெண்கள்கும்மியடிக்கையில்
செட்டிகுளத்துஅழகன்வயக்கல் சேர்ந்தபிள்ளையார்தனையுமாய்க்
கோரங்கிழங்குகளையெடுக்கின்ற குமரிப்பள்ளிகள்நெளிப்பையுமஞ்சட்
குளிப்பையுமனக்களிப்பையும்பரி மளிப்பையும்பாரும்பள்ளீரே (106)

### கலிப்பா.

மாற்றதிகமான தங்கமாநிதிகண்ணுள்ளவளைப்
போற்றிசெய்யுமன்பர்புரிபுண்ணியம்வேரூன்றுதல்போல்
நாற்றுநடவெங்குமவர்நன்மனம்போலேகரைத்த
சேற்றில்நடவேரூன்றிச்சேரவளர்ந்தோங்கியதே (107)

சிறுமைப்படாதவழியைத்தெரிந்தே அடிமைப்படவந்தவர்க்கெல்லாம்
செல்வமும்பாக்கியும்வாழ்வும் செம்மைப்படுத்திஇம்மைக்கு
மறுமைக்குந்துணையாகவந்தவள் வடக்குவாய்ச்செல்விபண்ணைக்குள்
வயலினிற்களைதழையவேபெண்கள் மதிமுகக்களைவிளையவே
நறுமைக்குவளைகளைபரப்பியேநாலுதிக்குள்ளசெய்க்கெல்லாம்
நல்லநாச்சியார்கண்ணுடையவள் நளினமலர்த்தாள்நம்பினோர்
வெறுமைக்கலியைப்பிறவிக்கடலை வினைத்துன்பங்களைப்பிணிகளை
வேருடன்களையெடுத்தாற்போற்களை யாருடனெடுத்தார்களே (108)

நதியணிந்தவருடனடம்புரி நாச்சியாரருள்வேண்டியே
நாட்டமுங்களியாட்டமும்பொரு ளீட்டமுங்கொடுப்பவருக்குக்
கதிதருந்திருச்சந்நிதிதனி லெதிர்தருந்திருநீறெனும்
கற்பந்தரித்தநாள்முதல்வந்து கெர்ப்பந்தரித்துக்கிளைக்கெல்லாம்
நிதிதரும்பொருள்விளைந்திடமனை நிறைந்தமக்களைப்பெறுதல்போல்
நெடியசாலிகள்கருக்கொண்டுகதிர் நீண்டுநிந்தமெனனம்மனைத்
துதிசெய்யும்புலவோர்கள்மனையி லதிசெயம்பெருஞ்செந்தமிழ்
சொல்விளைந்ததுபோலவேவயல் நெல்விளைந்ததுகாணுமே (109)

---

## கதிரறுத்துக்கண்டுமுதல்.

### கலிப்பா.

சீருகந்தகண்ணுடையாள்தேவிதிருத்தாள்போற்றிக்
காருகந்தபண்ணைக்கதிரரியவேண்டுமென்று
பாருகந்தபள்ளரெல்லாம்பண்ணையான்சொற்படியே
நீருகந்தபூங்கழனிநிறையவந்துகூடினரே (110)

### சிந்து.

கரியமால்அயனிமையவர்புகழ் கண்ணுடையவள்வயலுள்ளே
கனபள்ளருடன்பள்ளிகள்வந்து கதிரரிந்துபின்கட்டியே

வரிசையானகட்டெடுத்துக்களத்தில் மலைகள்போலேபோர்வைத்து
மகிழ்ந்துகொத்தரிலிலவுகுறித்து மறுநாட்கழித்துச்சூடெல்லாம்
பரிவுசேர்சிவபத்தியில்லாமல் திரியுமானிடமிருகமாய்ப்
பருங்கிடாக்கள்போற்கருங்கிடாக்களைப் பலபிணையலாய்ப்பூட்டியே
பெரியசூடுகள்நூறுநூறாய்ப் பிரித்தடித்துவைக்கோலையும்
பின்புதள்ளியேநெடும்பொலிகளைக் கும்புசெய்தனர்குடும்பரே (111)

நாலுதிக்கிலுங்குவித்தபொலியை நன்றாகப்பொலிபொலியென்றே
நடந்துபள்ளர்கள்தூற்றவேமலர் மடந்தைகண்ணுடையவளெனும்
வாலைசுந்தரிபதம்வணங்காத மக்கள்பதராய்ப்பிறந்திடும்
மனிதப்பதர்களென்னக்கலந்து மணிநீர்ப்பதரைநீக்கியே
கோலாகலமாயளந்துநாச்சியார் குழுணிலையனூர்குறுணியும்
கொத்துப்பிடிகள்பெருங்கங்காணம் குளவெட்டுப்பலசுவந்திரம்
சோலியுள்ளதுமணியங்கணக்குச் சொன்னகங்காணமுன்னுக்குத்
துகையிட்டளந்தார்பண்ணைநெல்லெல்லாம் வகையிட்டளந்தார்குடும்பரே (112)

உலகில்மிக்ககண்ணுடையவள்திரு உண்மைமகிழும்பள்ளிசை
உரைத்ததமிழ்க்குத்திருக்கைவிளக்கம் உம்பளம்நிலம்சம்பளம்
நலமிகுந்திருநாட்கட்டளைகள் நடக்கும்வரிசைநடக்கவே
ராசகரத்தார்நகரமூவர் நாலுகாரணவகுப்புள்ளோர்
பலஜனங்களுந்தரும்பொன்பூஷணம் பணங்கள்கடுக்கன்மோதிரம்
பட்டுபட்டாங்குசாதிரைத்தலைப் பாகுதுப்பட்டிபாற்பசு
விலையுயர்ந்தநெல்நவமணிகள் வெகுமதிவந்துகுவிந்தாற்போல்
விளைந்தநெற்பொலிகுவிந்திடப்பொலி யளந்தநெற்பொலிகுவிந்ததே (113)

கலிப்பா.

மாதாவாங்கண்ணுடையமாமயிலைப்போற்றிவய
லாதாயமுஞ்சிலவும்அம்பாரநெல்வகையும்
காதாரக்கேட்கமுங்கண்டுபண்ணைக்காரனிடம்
நீதானுரையெனவேயின்றுபள்ளன்சொல்வானே (114)

சிந்து

செந்நெல்க்குடியிற்பெரியசெய்வகுப்பில் வைகாசிமதத்தைத்
திருநாட்கட்டளைக்கிருநூற்றிக்கலம் ஒருநாட்போலளந்தேன்
சொன்னசிலவுக்கின்னம்வேணுமென்றே நூற்றிக்கலநெல்
சொரிகுரும்பையுமரியிரங்கலும் வரியனுக்களந்தேன்
இருப்புக்கால்கொண்டுகருப்புக்கால்விளைநெல் உச்சிக்காலத்துக்கெழுநூற்றிக்கலம்
ஏர்க்குச்சம்பாநெல்முழுமூச்சாயளந்தேன்
திருப்பணிவேலைக்கருப்புக்கட்டிவிலை வீராண்டிவயல்ச்
சிறுமணியனில்மறுவில்லாநெல்லும் குருவையுமளந்தேன் (115)

குணதிசைக்கரையணையடைத்திடவும் நடுக்குளங்கடைக்
கொம்புக்குச்செந்நெல்க்குடிக்கண்மாய்க்கும் நம்பிக்கையாகப்

பணவிலைப்படிமணவாரிப்பொலியில்நூற்றிக்கலநெல்
பட்டர்பங்குடன்குளவெட்டுக்கூலி ஒட்டருக்களந்தேன் (116)
கெம்பீரத்துடனம்பாரக்கிடையில் இலுப்பைக்குடிக்குங்
கீழக்கண்மாய்க்குங்கிணறுவெட்டுக்கும் வாழைத்தோப்புக்கும்
சொம்பாகம்விளைசம்பாச்செய்ப்பொலியில் கூலிப்பள்ளுக்கும்
தொண்ணூற்றிக்கலந்துய்யமல்லிநெல் எண்ணிக்கொண்டளந்தேன் (117)

அருமைத்தாயார்மேற்பெருமைப்பள்ளுரைத்த புலவருக்குநான்
ஆற்றித்தூற்றிநூற்றிக்கலநெல் சோற்றினுக்களந்தேன்
குருவுக்கென்றுபின்னிருபத்தைங்கலநெல் அடிமைதனதிற்
கொண்டுபோய்வைத்துக்கண்டு வணங்கிக்கும்பிட்டுக்கொடுத்தேன் (118)

வெண்பிறைத்திருவேணிநாரணியாம் கண்ணுடையவள்
மிக்கபண்ணைக்குவேண்டியவிரை வர்க்கமுள்ளதெல்லாம்
பண்புடன் வகைக்கெண்பதுகோட்டைவிரையாகவிரைப்
பட்டடைபதினுலிலும்விரை கட்டினேனாண்டே (119)
அம்மனுக்குள்ளசொம்மிலுப்பைக்குடிக் கோவில்கெம்பரை
ஆறின்மூவாயிரநூறுகட்டுக்கிடை
நம்மிடகள்ளன்பேய்ப்புலிவாசல்பெரியகெம்பரை
நாலிலுமிரண்டாயிரக்கலமேலுமுண்டாண்டே (120)

## கலிப்பா.

பொன்மகள்கண்ணுத்தாள்புகழ்பண்ணைநெல்விபரம்
நன்மையுள்ளபண்ணைநயினூர்க்குச்சொல்லியபின்
தன்மனதுகூர்ந்துதனித்திருக்கும்போதுபள்ளன்
வர்மமெல்லாமூத்தபள்ளிவந்துசொல்லக்கண்டானே (121)

## சிந்து.

சொந்தடியாள்வந்து கும்பிடுறேன்பண்ணையாண்டேபள்ளன்
சூதறியீரென்றுசொல்லவல்லேலாவந்தேனாண்டே
கொந்தளமிட்டல்லோநண்டுபிடிப்பதேனாண்டே உங்கள்
கொத்தடிமைசெய்யுங்கொடுமையைக்கேளுங்காணாண்டே (122)

## வேறு.

முந்தினபள்ளிநானென்றுசொந்தமுந்தள்ளி இளையவள்
முகமுரியாமல்களப்பெறுந்துகைபிரியாமல்
வந்தையொதுக்கிஅவளுக்குவிந்தையைப்புகுக்கி மேய்ச்சால்
மதினியைமேய்ப்பான்பனங்கள்ளைப் பதினியென்றேய்ப்பான்
சந்தமாம்பாட்டுக்கேட்கநான்முந்தானைபோட்டுக்கொண்ட
சஞ்சலமாறேனவள்செய்ததென் சொல்லப்போறேன்
நிந்தனைதொடுப்பான்எனைக்கண்டால்தெந்தனமெடுப்பான் அவ
னுக்குநீரினிச்சொல்லும்உம்மைப்போலாரினியாண்டே (123)

## கலிப்பா.

சோதிமணிகண்ணுடையாள்சொல்வளமைப்பண்ணையெனு
மாதிமுதலானபண்ணை ஆண்டவர்க்குத்தூண்டிவெகு

சேதிசொல்லவேண்டுமென்றுசென்றுநின்றுமூத்தபள்ளி
பாதிசொல்லுமுன்னிளையபள்ளிதுள்ளிவந்தாளே (124)

## பள்ளிகள் ஏசல்.

குண்டணிபரைந்ததென்னமூத்தபள்ளி தினங்
கொள்ளையிடக்கிடையாட்டால்க்கோபமென்னடி
உண்டானகாரியந்தானிளையபள்ளி உனக்
குள்ளதுசொன்னால் மனதிலுறைக்குதோடி
எனக்கேனுறைக்குமடியிளையபள்ளி உன்போ
லிருக்குள்ளபள்ளிக்கல்லொ உறைக்குமடி
சினத்துநான்சொன்னபடியிளையபள்ளி உன்னைச்
செலுத்தாமல்விட்டால்வர்மந்தீராதடி
தீராதகோபமென்னமூத்தபள்ளி கொல்லத்
தெருவிலேவூசிவிற்கச்செல்லுமோபோடி
பூராயக்காரிநீதானிளையபள்ளிமுழுப்
பூசினிக்காயுஞ்சோற்றில்புதைப்பாயடி
புதைப்பாய்பணமிருந்தால்மூத்தபள்ளி சும்மா
புழுதிப்பிரட்டிலேவாய்போக்காதேபோடி
பதைப்பெல்லாம்நானறிவேனிளையபள்ளி சின்னப்
பள்ளியென்றால்நயினார்க்குப்பக்ஷமல்லோடி
பக்ஷமுண்டுசொல்லுண்டானால்மூத்தபள்ளி நல்ல
பாலும்பதக்குமோரும்பதக்கோடி
தெட்சணைவைத்தாரிடத்தில்இளையபள்ளி இந்தத்
தெந்தனவித்தைபடித்தாய்சிறுக்கிபோடி
சிறுக்கிதானுன்னைப்போலேமூத்தபள்ளி இன்னம்
சிகிற்பண்ணிமுகங்காட்டித்திரியிறேனோடி
இறுக்கிஉறுக்கிவாராயிளையபள்ளி எங்கள்
எழூர்ப்பத்திலோரூரிருப்பதடி
இருப்பதுவுஞ்சித்தமென்றால்மூத்தபள்ளி பள்ள
னென்னைக்கண்டாசைகொள்வானினிச்சொல்லடி
உருக்கமறிவேனடியிளையபள்ளி உனக்
குச்சாயமெல்லாஞ்சர்க்கரைக்கச்சாயமடி
ஆடுவாய்பாடுவாய்நீதானிளையபள்ளி உன்சொல்
ஆர்க்குமிச்சமானலூர்க்குமேர்க்குமோபோடி
ஏர்க்குமென்றுதானல்லவோமூத்தபள்ளி இப்போ
ஈய்க்குநாய்க்குந்தடையில்லையென்கிறாயடி

சேர்க்கையாய்ப்பணமும்நெல்லும்இளையபள்ளிவந்து
சிக்கிறேலுனக்குடம்புதெரியாதோபோடி

தெரியுமினித்திராணிமூத்தபள்ளி சற்றே
தீண்டிநான்பார்க்கிறேனுன்சீத்துவமடி

நளியெதிர்த்தாற்சிங்கமல்லோயிளையபள்ளி உன்னை
நடுவீட்டில்நட்டுவைத்தேன்நானல்லோடி

நானறிவேனந்தச்சேதிமூத்தபள்ளி நீதா
னட்டுவைத்தாய்பண்ணைச்செய்யில்நாற்றையல்லோடி

பண்ணைப்பள்ளன்கொள்ளவந்தயிளையபள்ளி முறை
பார்க்கநான்பெரியகுடிப்பள்ளியல்லோடி

பெண்ணைக்கேடாய்ப்பேசுகிறாய்மூத்தபள்ளி உந்தன்
பேருஞ்செந்நெல்க்குடிப்பள்ளி!பிசகென்னடி

பெரியதனம்பேசுகிறாயிளையபள்ளி உந்தன்
பேரிலுப்பைக்குடிப்பள்ளிபிசகென்னடி

பரிவாயிரண்டுகுடியிளையபள்ளி கோயில்ப்
பண்ணைக்குடும்பனுக்குப்பலித்துதோடி

பலித்ததற்குத்தாட்சியென்னமூத்தபள்ளி சும்மா
பணத்துக்கோவந்தேனிந்தப்பள்ளனுக்கடி

மெலித்துப்பேசலுமாச்சேயிளையபள்ளி இன்னும்
வீரிசொல்வாய்நீகனக்காரியல்லோடி

கனக்காரியென்கிறாயேமூத்தபள்ளி துரை
கட்டளைசெய்யூர்ப்பள்ளிகனமல்லோடி

மனைக்கேருள்ளகாலந்தொட்டிளையப்பள்ளி பண்ணை
வந்தநாளில்வந்தவள்நான்வலுவல்லோடி

அல்லவடிகூறுகெட்டமூத்தபள்ளி எந்த
ஞைசப்பள்ளனுக்குநீதாறேடிபோடி

சொல்லச்சொல்லமிஞ்சுகிறாயிளையபள்ளி மிகத்
துள்ளுமெருதுபொதிசுமக்குமடி

சுமக்குமெடுத்துவிட்டால்மூத்தபள்ளி வெறுந்
தோதகமாடாதேவண்டத்தோப்பாடிபோடி

இமைக்குங்கண்ணுக்கும்வேறேயிளையபள்ளி உனக்
கென்னைப்போலேதாய்தமக்கையில்லையோபோடி

உன்னைப்பார்க்கப்பின்னையார்சொல்மூத்தபள்ளி விரு
தாதிச்செடிநுழையவொண்ணுதடி

பொன்னைப்பலகூறிட்டாலுமிளையபள்ளி கூடப்
போட்டுருக்கும்போதிலொன்றாய்ப்பொருந்துமடி

பொருந்தாமற்போவதுண்டோமூத்தபள்ளி என்னைப்
பூஷணமாய்வைத்தாளுன்னைப்போற்றுவேனடி

விருந்துபசாரமல்லயிளையபள்ளி இது
வேளைப்பிசகாய்வந்தவீண்பேச்சடி

பேசிலென்னயேசிலென்னமூத்தபள்ளி களப்
பேறெல்லாமுனக்குவாங்கித்தாரேனடி

ஆசைதீரவேணுமடியிளையபள்ளி பள்ள
னந்தரங்கம்நீயல்லவோஅறிவாயடி

நீயுஞ்சொன்னாய்நானுஞ்சொன்னேன்மூத்தபள்ளி நம்மள்
நீதிமார்க்கந்தப்பவொண்ணாதடிகேளாய்

தாயும்பிள்ளையும்போலேயிருபேரும்வாழி
தான்மகிழ்ந்துபாடிநன்றாயிருக்கவாடி

வாழிவாழிகண்ணுடையாள்பாதம்வாழி முத்து
வடுகனாதேந்த்ரம்காராஜன்வாழி

வாழிபுவிநாடுகார்மிகவாழி தமிழ்
வாழிமறைவாழி,தினம்வாழிதானே (139)

கண்ணுடையம்மன் பள் முற்றும்.

---

இஃது
இப்புதககத்தை பிழையறப் பரிசோதித் தச்சிடச்செய்த,
மானகுடி வில்வக்ஞ மு. முத்துகிர்ஷ்ண
உபாத்தியாயரியற்றிய
வாழிவிருத்தம்.

---

பெருகும்வடகலைவேள்விநாடுவாழி
பெருனமமிகுந்தென்பனைசைநகரம்வாழி
யருணமலிசோழீசரிருபாதம்வாழி
யரிவாழியையங்கான்வேலந்தன்வாழி
சுருதிபணிபதமலர்க்கண்ணுடையாள்வாழி
சுந்தரஞ்சேராலயம்பொன்மலைபோல்வாழி
பருதிமதிபுவிவாழியிந்நூறன்னைப்
படிப்பவர்கேட்பவருமென்றும்வாழிவாழி

வெண்பா.

கண்ணுடையதாய்மகிமைகாசினியோரிவ்வளவென்
றெண்ணுடையதாய்மதிககவேலாதுமண்ணுடைய
புன்மூளைக்கவெத்தனைநாள்போகுமுடனேயவித்த
நென்முளைத்தல்சாட்சிநிஜம்.

---

Printed at the Ananda Bodhini Press, Madras.